குண்டூசி
தெய்வீகத்
ஆகஸ்ட் – 84
விலை ரூ. 1-50
திருமண
பட்டு ஜவுளிகளுக்கு
சாரதா
சில்க்ஸ்

Sensation

"The enchanting fragrance of Sensation enables me to attain sublime heights and maintain classical excellence in my music".

— Ustad Amjad Ali Khan

From the makers of Sugandha Shringar & Shirin Agarbathis

ARAVINDA PARIMALA WORKS,
MYSORE 570 004

Sole Selling Agents for South East Asia.

M/s. BHAVANI STORES PTE LTD.,
1, Shenton Way, 19-02,
Robina House,
SINGAPORE - 0106.

Telephone No : 2214905/2214200/
2214209 (Off.) 3373370 (Branch)
289227 (Kuala Lumpur)

EPIC

SEVEN PROVEN WAYS TO SAVINGS

- SAVINGS BANK
- RECURRING DEPOSITS
- FIXED DEPOSITS
- PORKUVIAL DEPOSITS
- SERFOJI DEPOSIT PLAN
- CHOLA CASH CERTIFICATES
- MINI DEPOSIT

Our Saving Schemes have been so formulated
As to help you save conveniently
Save Regularly.

come to BANK OF THANJAVUR or
ask for details. We are sure one of our
savings schemes will fit in to suit your requirements

A House of your own, Daughter's Marriage
Son's Higher Education, Business or
Industrial Expansion—any of these problems
Solve them through the
BANK OF THANJAVUR.

Seven Proven ways
Help you solve your problem

BANK OF THANJAVUR LIMITED

Regd. Office : 1087, Mission Street
THANJAVUR - 613 001
(Tamil Nadu)

S. CHOCKALINGAM
General Manager

எமது சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்
வாயில், நைலெக்ஸ், நைலான்
ஷிபான், ஜார்ஜெட்,
பட்டு மற்றும்
வியப்பூட்டும்
பேரெழில் சேலைகளுக்கும்
இன்றே
விவியின் பிரத்யேக
புடவை பிரிவிற்கு
விஜயம் செய்யுங்கள்
பேஸ்மெண்ட்
ஷோரூம்
(ஏர்-கண்டிஷண்ட்)
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
பி. லிமிடெட்
ஸ்டேட் பாங்க் ஆப் மைசூர்
ஹைகோர்ட் எதிரில்
சென்னை-600 001 போன்

பட்டை 37 ஊசி 11

ஆகஸ்ட் 1984

எங்கே சுதந்திரம்? யாருக்கு சுதந்திரம்?

பாரதத்திற்கு சுதந்திரம் கிடைத்து மூன்று மாமாங்கம் முடிந்து விட்டது.

இந்த முப்பத்தேழு ஆண்டில் நம் நாடு முன்னேறவில்லை என்று சொல்லமுடியாது. அதே நிலையில் முன்னேறி உள்ளது என்றும் சொல்லமுடியவில்லை

வெள்ளையர் ஒரு துண்டுகூட எடுத்துக்கொள்ளாமல் அப்படியே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் ஜப்பான் தேசத்தை மைதானமாக்கி விட்டு அடிமைப்படுத்தி சென்றார்கள்.

இன்று சர்வதேச நாட்டில் ஜப்பான்தான் தலைநிமிர்ந்து நிற்கிறது. உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் அவர்களுடைய தயாரிப்புகளுக்குத் தான் மார்க்கெட்டு அதிகமாகியுள்ளது.

ஏப்படி இவர்களால் இந்த நிலையை அடைய முடிந்தது? நாம் இன்னும் பின்தங்கியே நிற்கிறோம் எந்த ஒரு தேவைக்கும் அயல்நாட்டினரையே நம்பி நிற்கும் நிலையில் உள்ளோம். சிந்திக்கவேண்டிய விஷயம்தான்

ஜப்பானியர்களின் தேசப்பற்று, நேர்மை, நாணயம், மனச்சாட்சிக்கு உட்பட்டு கடினமாக உழைப்பது இவைகளதாம, அவர்கள முன்னேறியதற்கு முக்கிய காரணம்.

நம் பாரதத்தில் ஜப்பானிய நாட்டவர்கள் கடைபிடிக்கும் எதுவும் நம்மவர்களிடம் இல்லை என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டும்

அரசியல்வாதிகளை எடுத்துக் கொள்வோம். இவர்களில் எந்தக் கட்சியிலாவது ஒற்றுமை உண்டா? அவரவர்கள் சுயநலத்தில் சுதந்திரமாக செயல்பட்டு, பதவி, பணம், புகழ் இவைகளுக்கு அடிமையாகி, எப்படியோ தான் வளர்ந்தால் போதுமென்ற நிலையில். நாட்டைப் பற்றியோ, நாட்டு மக்களைப் பற்றியோ கவலைப்பட மாட்டார்கள்.

ஆனால் தேர்தல் சமயம் மட்டும் மக்கள் நினைவு எல்லா கட்சிகளுக்கும் வந்துவிடும் குறிப்பாக, ஆளும்கட்சி அதிகமான அன்பும் அக்கறையும் காட்டி, கவர்ச்சியான அறிக்கைகளையும், வாக்குறுதிகளையும் வாரி வழங்குவார்கள் ஆயிரக் கணக்கில் தண்ணீர்த் தொட்டிகள் கட்டியதாக பட்டியல் போடுவார்கள். ஆனால் எத்தனை தொட்டிகளில் தண்ணீர் உள்ளது என்பது அவ்வூர் மக்களுக்குத்தான் வெளிச்சம்.

தனக்காக பல காலம் வாழ்ந்தாலும், கடைவழி பயணமான **இறுதி காலத்திலாவது மற்றவர்களுக்காக வாழப் பழகவேண்டும்**

ஆண்டவனே! நம் பாரதமும் உண்மையான சுதந்திரம் காண, ஜப்பான் நாட்டைப்போல கடினமான உழைப்பின் மூலம் சம்பந்தபட்டவர்கள் கடவுளுக்கு பயந்து செயல்பட நீதான் நற்புத்தி கொடுத்து காப்பாற்ற வேண்டும்.

—ஜெய்ஹிந்த்

காஞ்சி காமகோடி பரமாச்சார்யாள் அருளியது

ஸ்வாமி

ஒரு வீட்டைப் பார்த்தால அதைக் கட்டியவன் ஒருவன் இருக்க வேண்டுமென்று ஊகிக்கிறோம். இந்த எஞ்சினியர் கட்டினார் என அறிகிறோம. ஒரு வண்டியைப் பார்த்தால் அதைச் செய்த ஒருவன் இருக்க வேண்டுமென்று ஊகித்துப் பின், விசாரித்ததில் இன்ன தச்சன் செய்தானென்று அறிகிறோம்.

ஒரு வீடு அல்லது வண்டி என்றால் அதில் பல விஷயங்கள் ஒன்றுக்கொன்று இசைவாக சேர்ந்து அமைந்திருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பலனை உத்தேசித்து அவை இவ்வாறு உருவாகியிருப்பது தெரிகிறது. எனவே, இந்த வீடு, இந்த வண்டி, ஏதோ தானாகவே உண்டாகிவிடவில்லை. இதை ஒரு உத்தேசத்தோடு ஓர் அறிவே செய்திருக்கிறது என்று ஊகிக்கிறோம்.

ஒரு ஒழுங்குக்குக் கட்டுப்பட்டுப் பல வஸ்துக்களைச் சேர்த்து உண்டாக்கியிருக்கிற எதைப் பார்த்தாலும் அதை செய்தவன் ஒருவன் இருக்கவேண்டும் என்று ஊகிக்கிறோம்.

அப்படியானால் எத்தனையோ ஒழுங்குகளுக்குக் கட்டுப்பட்டு இந்த பிரபஞ்சத்தைச் செய்தவனாக ஒருவன் இருக்கத்தானே வேண்டும்?

எத்தனையோ வேறு வேறு விதமான வஸ்துக்களைப் பலவிதங்களில் சேர்த்து வைத்துப் பலவிதமான பலன்களை உண்டாக்கிக் கொண்டிருக்கிற இயற்கையை, லோக வாழ்க்கையைப் பார்க்கிறபோது இவைகளையெல்லாம் இதற்காகவே உண்டாக்கி இவற்றை நடத்தி வருகிற மாபெரும் சக்தி ஒன்று இருக்கத்தான் வேண்டுமென்று தெரிகிறது.

நாம் உட்கார்ந்திருக்கும் இந்தக் கொட்டகையை யார் போட்டார்களென்றால் சொல்லத் தெரிகிறது. இந்த வாழை மரத்தை யார் செய்தார்? கண்ணில் காட்டும்படியாக அதைச் செய்தவனைச் சொல்லத் தெரியவில்லை. ஆனாலும் ஒருவன் அதை செய்திருக்கிறான், அதனால்தான் இப்படி அழகாகப் பட்டை பட்டையாகக் கணக்குப் பிசகாமல் உள்ளுக்குள்ளே அடுக்கிக் கொண்டே இந்த வாழை உண்டாகியிருக்கிறது.

எந்த ஆயுதத்தை வைத்துக் கொண்டு அந்த ஒருவன் இத்தனை அழகாகப் பட்டைகளை அடுக்கினானென்றால் தெரியவில்லை. இப்படியே அந்த மலையை, மேலே உள்ள நட்சத்திரங்களை, சந்திரனைச் செய்தவனை நம்மால் காட்ட முடியவில்லை.

இவையெல்லாம் எத்தனையோ முன்னால் உண்டானவை. செய்த வினை எப்படிக் காட்டுவது? என்று கேட்கலாம் சரி இந்த ரோஜாப் புஷ்பம் இருக்கிறதே. இது அந்த வாழையை விடச் சமீபத்திலுண்டானதுதான் முன்னால் சிறு மொட்டாயிருந்தது. இன்னாளில் அழகிய பூவாகியிருக்கிறது இதில் நூற்றுக் கணக்கான இதழ்கள். ஒவ்வொன்றிலும் நுண்ணிய நரம்புகள், வாசனை எல்லாமே வந்திருக்கின்றன. நம் கண் முன்னேயே இது மலர்ந்தது. ஆனாலும் மலர்த்தினவனை நமக்குத் தெரியவில்லை.

மனிதன் எல்லாம் தெரிந்த கெட்டிக்காரன் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு காட்டுமனுஷன் சென்னை பட்டணத்தைச் சுற்றி வந்தால் எதுவுமே தனக்குத் தெரியவில்லை, என்று எப்படி ஆச்சர்யப்பட்டுப் போகிறானோ அப்படித்தான் இந்தப் பிரபஞ்சத்தில் நாம் இருந்துகொண்டிருக்கிறோம் மனிதனை விடக் கெட்டிக்காரனான ஒருவன் அவனை இப்படி வைத்திருக்கிறான்.

கெட்டிக்காரன் என்று தன்னை நினைத்துக்கொண்டிருக்கும் மனிதன் இத்தனையையும், இவனையும் செய்த அந்த மகாகெட்டிக்காரனைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் அவன் மகாகெட்டிக்காரன் மட்டுமல்ல; மகாநல்லவனுங்கூட. இத்தனையைத் திட்டமிட்டுப் படைத்த பேரறிவு என்பதோடு, இத்தனையையும் ரட்சிக்கும் பெருங்கருணையும், நமது கெட்டிக்காரத் தனத்தையும் அவன் தந்ததே என்று தெரிந்துகொண்டு அவனைப் பிரார்த்தித்துக்கொண்டால் நமக்கு அவன் நல்லது செய்வான்.

அவன்தான் ஸ்வாமி. ஸ்வாமி என்பவன்.

இந்த நமது கெட்டிக்காரத் தனமே அவனுக்கோர் அடையாளந்தான். கள்ளனைக் கண்டு பிடிக்க மண்ணில் பதிந்த காலடிச் சுவடு இருக்கிறதுபோல், உள்ளங்கவர் கள்வனான ஸ்வாமியின்காலடி பிரபஞ்சத்தின் எல்லா இடத்திலும் பதிந்து கிடக்கிறது.

நம் கெட்டிக்காரத்தனமும் அவனது காலடி அடையாளந்தான். இந்தக் கெட்டிக்காரத் தனத்துக்கெல்லாம் ஓர் ஆதாரம் இருக்க வேண்டுமென்று அது காட்டிக் கொடுப்பதால் அதுவே காலடியாகிறது.

சிருஷ்டி கர்த்தனான ஒரு ஸ்வாமி இருப்பதற்குநாமே அடையாளம் நம் ஒவ்வொருவர் உள்ளங்கையிலும் அவன் விதவிதமாகப் போட்டுள்ள மாதிரி நம்மால் போடமுடியுமா? இந்தப் பட்டணம் முழுதும் அநேக மனிதர்களின் கெட்டிக்காரத் தனத்தால் செய்துள்ள காரியங்களைவிட, அதிகமாக ஒரு சிறு இலையில் போட்டிருக்கிற ரேகைகளில் விசித்திரம் செய்திருக்கிறான் அவன் பிரபஞ்ச வஸ்து எல்லாமே அந்த மகாதிருடனின் ரேகை அடையாளம்தான்.

திருடன் பதுங்கியிருப்பதுபோல இவனும் பதுங்கியிருப்பவன்தான். அவன் குகைக்குள் ஒளிந்துகொண்டிருக்கிறான் என்றே வேதம் திரும்ப திரும்ப சொல்லும்.

நம் இதயம்தான் அந்த குகை. தமக்குள்ளேயே ஒளிந்துகொண்டு நமக்கு வெளியே இத்தனை அற்புதங்களைச் செய்து, நம்மை ஆச்சரியப்படுத்தித் தன்னைத் தேட வைக்கிறான் ஸ்வாமி. அப்படி அவனைத் தேடுவதுதான் பக்தி.

தொகுப்பு: ஏ.எஸ்.எம், சென்னை

ஸ்ரீகிருஷ்ணகர்ணாம்ருதம்

(ஸ்ரீ லீலாசுகர் அருளியது)

கண்ணனது புன்சிரிப்பின் அமிர்தமயமான தன்மையை மோட்சத்திற்கு ஒப்பாக எண்ணுகின்றார் லீலாசுகர். அமிர்த சாகரமும் இந்த இன்பத்திற்கு இணையாகாது என்பது அவர் துணிபு.

காமம் ஸந்து ஸஹஸ்ரச ; கதிபயே ஸாரஸ்வ கைரேயகா:
காமம் வா கமனீயதாப ரிணதிஸ்வா ராஜ்ய வத்தவ்ரதா :
தைர்நைவம் விவதாமஹே நச வயம் தேவ ! ப்ரியம் ப்ரூமஹே
யத்ஸத்யம் ரமணீயதாபரிணதி ஸ்த்வய்யேவ ?பாரங்கதா 99

காம சாஸ்திரத்தில் தம்மைப்போல எவரும் அறிந்தவரில்லை என எண்ணி வாழும் பல காமுகர்கள் உலகில் உள்ளனர். அவர்கள் அவ்வாறிருக்கட்டும்.

மேலும் பலர் அகண்ட சாம்ராஜ்யமாகிய (எங்கோ இருக்கும்) மோட்சகதியின் சுகத்தையும், அழகையும் பெற தம்மை அர்ப்பணித்து நிற்கின்றனர். அவர்களும் அவ்வாறு இருக்கட்டும். அவர்களோடு எல்லாம் எனக்கு எந்தவிதப் போட்டியும் இல்லை.

கண்ணா! நான் உம்மை புகழ்ந்து முகஸ்துதி செய்ய விரும்பினேனில்லை. ஹே பகவன்! உண்மையாகச் சொல்லப்போயின் உன்னிடம் தான் அதிலாவண்ய அழகின் சாரம் உன்னதமடைந்து திகழ்கிறது. என மனதில் கண்ட கண்ணனின் அழகு செறிந்த ரூபலாவண்யத்தை அனுபவித்து நமக்கு எடுத்துரைக்கிறார் லீலாசுகர்.

மந்தாரமூலே மதனாபிராமம் பிம்பாதார பூரித வேணுநாதம்
கோகோப கோபீஜனமத்யஸம்ஸ்தம் கோபம் பஜே கோகுல
பூர்ணசந்த்ரம் 100

பி. எஸ். பரமேசுவரன், பி.ஏ., பி.எல்., சென்னை.

நான் வணங்கும் கோபாலன்—கோகுலத்தினை மகிழவைக்கும் பூர்ண சந்திரனுக்கு சமமானவன்; அவன் மந்தார விருட்சத்தினடியில் காமதேவனைப் போன்று லாவண்யம் மிக நிற்கிருன் அவன் தனது இனிய இதழ்களின் சுகந்த மூச்சுக் காற்றினுல் குழலினை ஊதி நாதத் தினுல் பசுக்களையும், கோபாலரையும், கோபஸ்திரீக்களையும் தன்னைச் சூழவைக்கிருன். லீலாசுகர் தனது கண்ணனை வர்ணிக்கும்போது கோகுலத்தின் பூர்ண சந்திரசமான லாவண்ய ஸ்வருபன் என்கிருர். அவனது வேய்ங்குழல் நாதத்தின் ஓசை எல்லோரையும் அவனைச் சுற்றி நிற்க வைக்கும் தன்மை உடையது என்கிருர்.

களத்விடா லோலா மதனவனிதா கோபவனிதா
மதுஸ்பீதம் கீதம் கிமபி மதுரா சாபலதுரா
ஸமுஜ் ரும்பா கும்பா மதுரிமகிராம் மாத்ருச்சகிராம்
த்வயிஸ்தானே ஜாதே தரதி] சபலம் ஜன்ம சபலம்

கண்ணு! நீ அவதரித்ததன் காரணமாக கோகுலத்திலுள்ள மடந்தைகள் அச்சமும் நாணமும் நீங்கியவராக மனம் கவங்கியிருந்தாரா யினும், பிரேமையின் சந்நிதானத்தில் பூஜிக்கும் நிலையை எய்தினர். உனது வேய்ங்குழல் நாதம் அற்புதமாக தேனினும் இனியதாக விளங்கு கிறது. உனது அடங்காத செய்கை எிழும் இனிமை மிக்க உன்ன தத்தைக் காண்கிறேன். என் போன்ற சாதாரண மனிதர்களின் சொற் கோர்வைகள் உன்னிடம் ஈடுபட்ட பக்தி செறிவினுல் அதி உன்னதமான கவிகளின் கவிநயம் மிக்க பிரபந்தங்களாகின்றன.

கண்ணு! இவற்றையெல்லாம் விட எனது நடோடி வாழ்க்கையும் பலனுள்ளதாக ஆயிற்று. பகவான் அவதாரத்தினுல் எவ்வாறு ஒவ் வொருவருடைய நிலையிலும் மாற்றம் காணக் காரணமாக அவன்மேல அவர்கள் செலுத்தும் பக்தி விளங்குகிறதென்பதைக் கூறுகிருர்.

புவனம் புவனம் விலாஸினிஸ்ரீ
ஸ்தனயஸ் தாமர ஸாஸனா: ஸ்மரஞ்ச
பரிசார பரம்பரா ஸுரேந்திரா
ஸ்தாபி த்வச்சரிதம் விபோ விசித்ரம் 102

கண்ணு! இந்த அகிலம் உனது இருப்பிடம். உன் அன்புமிக்க பத்தினி அழகுக்கெல்லாம் தெய்வம். அண்ட சராசரங்களுக்கும் சிருஷ்டிகர்த்தாக்களான பிரம்மனும் காமதேவனும் உனது பிள்ளைகள். மற்ற தெய்வங்களெல்லாம் உன்னிடம் ஈடுபாடுமிக்க ஊழியர்கள் இவை தையெல்லாம் பார்க்கும்போது கண்ணு! நீ கோகுலத்தில் நடத்திய லீலைகள் எவ்வளவு ஆச்சரியமானவை! அந்த லீலைகள் இவற்றினும் மேலும் மேன்மையானவை.

இங்கு லீலாசுகர் பகவானின் அனுபூதியினைக் காட்டிலும் அவர் கண்ணனாக அவதரித்து கோகுலத்தில் விளையாடிய விளையாட்டெல்லாமே அதியுன்னதமானவை என்று எடுத்துக் கூறுகிருர்.

47. திருப்போரூர் முருகன்

ஒரு கோயிலைக் கட்டவேண்டும் என்றால், அதற்கு முதல் தகுதி அவன் அரசனாக அல்லது ஆண்டியாக இருக்கவேண்டும் போல் தெரிகிறது.

பெரும்பாலும் முருகன் கோயில்கள் ஆண்டிகளால் கட்டப்பட்டோ அல்லது திருப்பணி செய்யப்பட்டோ இருப்பதை நாம் காண்கிறோம்.

சென்னைக்கு அருகே முப்பத்தாறு கல் தொலைவில் மாமல்லபுரம் போகும் வழியிலுள்ள திருப்போரூர் முருகன் கோயில் சிதம்பர சுவாமிகளால் முழுதும் திருப்பணி செய்யப்பட்டு குடமுழுக்கு செய்விக்கப்பட்டது.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன்பு சங்கம் வளர்த்த மதுரையிலே சங்கப் புலவர் மரபிலே தோன்றியவர் சிதம்பர ஸ்வாமிகள்.

மீனாட்சி அன்னை மீது பக்தி கொண்டு மீனாட்சியம்மை கலி வெண்பா பாடினார். மதுரையிலே பாண்டிய நாட்டில் தோன்றிய அவர் நடுநாட்டையடைந்து, திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தில் இருந்த குமாரதேவரை அணுகி அவரை ஞானாசிரியராக ஏற்றார்.

ஒருநாள் சிதம்பர ஸ்வாமிகள் சமாதி நிலையிலிருந்தபோது முருகனின் மயில் ஆடும் காட்சியைக் கண்டிருக்கிறார். பிறகு சில நாள் கழித்து தன்னுடைய குருவின் கட்டளைக்கிணங்க திருப்போரூரை அடைந்து மண்ணில் புதைந்திருந்த முருகனையும், வள்ளி, தெய்வயானையையும் கண்டெடுத்து வணங்கி, பொருள் சேர்த்து முறைப்படி கோயிலைக் கட்டி பூஜை முறைகளை ஏற்படுத்தினார்.

ஒரு பெண் பனை மரத்தினடியில், சுயம்பு மூர்த்தியாய் புற்று மூடியிருந்த தெய்வத் திருவுருவங்கள் ஸ்வாமிகளின் அருள்நோக்கினால் கண்டெடுக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பதிலிருந்து இக்கோயிலின் புகழை உணரலாம்.

மகேந்திரவாடி உமாசங்கரன்

ஸ்வாமிகள் திருப்பணி செய்வதற்கு முன்பு இக்கோயில் சிறந்து விளங்கி ஆறுமுறை மறைந்திருந்ததாக ஆன்றோர்கள் கூறுவர்.

கல்வெட்டுக்களில் இத்தலத்தை திருப்போரியூர் என்று குறித்திருக்கிறார்கள் வடமொழியில் சமரபுரி என்றழைக்கப்படுகிறது.

மகாவிஷ்ணுவுக்கும், லட்சுமிக்கும், கண்வ முனிவரால் ஏற்பட்ட சாபத்தை சிவபெருமான் போக்கியருளிய தலமென்றும், பிரணவத்தை முருகன் எல்லோருக்கும் உபதேசித்த பூமி என்றும் தலபுராணம் செப்புகிறது,

தலபுராணத்தை இயற்றியவர் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் அவர்கள்,

இத்தலத்தின் கோயிலுக்கருகில் பிரணவமலை என்ற பெயரில் ஒரு சிறிய குன்று இருக்கிறது. பிரணவமே மலையாக நின்றதால் பிரணவமலை என்றழைக்கப்பட்டது என்பர். மலைமீது கைலாச நாதரையும் பாலாம்பிகையையும் தரிசிக்கலாம். மலை ஏறுமுன் வேம்படி விநாயகரையும் தரிசிக்கலாம் அங்குள்ள வேப்பமரம் லட்சுமியின் வடிவாகக் கருதப்படுகிறது. பிருகு முனிவரின் சாபத்தால் லட்சுமியே வேப்பமரமாக நின்றுள் என்று தலவரலாறு கூறுகிறது.

பிரணவமலையை தரிசித்துவிட்டு கந்தப் பெருமானை தரிசிக்க கோயிலுக்குப் போகுமுன்பு, அழகிய தெளிந்த நீருடைய திருக்குளத்தை காண்கிறோம். நடுவில் நீராழி மண்டபத்துடன் கூடிய அத்திருக்குளத்தின் நீர் குடி நீராகவும் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலான கோயில்களின் திருக்குளங்கள் நீர் இன்றி மக்கள் அசுத்தப்படுத்தும்

With the best compliments of

●

AMRUTANJAN LIMITED

MADRAS - 600 004.

Makers of

HOUSEHOLD REMEDIES FOR OVER 90 YEARS

Branches at

BOMBAY — CALCUTTA — NEW DELHI

HYDERABAD — BANGALORE

இடமாக இருக்கும் இக்காலத்தில் தெளிந்த நீருடன் கூடிய ஒரு திருக்குளத்தைக் காணும்போது நம் மனம் பெருமையால் பூரிக்கிறது.

அடுத்து கோயிலுக்குச் செல்கிறோம். கோயில் கிழக்கு நோக்கியிருக்கிறது அழகிய ராஜகோபுரம், ஏழுநிலை மாடங்களுடன் அமைந்திருக்கிறது தெற்குப்புறமும் ஒரு வாயிலுண்டு ராஜகோபுரத்திற்கு முன்பாக ஒரு பதினாறு கால் மண்டபம் சிறந்த சிற்பங்களுடன் காட்சியளிக்கிறது. அதன் மேற்புறம் ஆல், அரசு போன்ற செடிகள்வேரூன்றி வளர ஆரம்பித்திருக்கின்றன. அவைகளை இப்பொழுதே அப்புறப்படுத்தாவிட்டால் பாழ்பட்டுப் போக வாய்ப்புள்ளது அறநிலையத் துறையினர் ஆவனசெய்யவேண்டுகிறேன்.

ராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றவுடன் வட்டவடிவில இரும்புத் தூண்களுடன் ஒரு மண்டபத்தைக் காணலாம். கொடிமரம், பலிபீடம் ஆகியவற்றை அங்கே தரிசிக்கலாம். அடுத்துள்ள இரு வாயில்களையும் கடந்து சென்றால் மஹாமண்டபத்தை யடையலாம் அங்கிருந்து கருவறையை தரிசனம் செய்தால் மூர்த்திகளின் விநோத அமைப்பைக் காணலாம்.

கருவறையிலுள்ள முருகன் பெண்பனையடியில் புதைத்திருக்கிறார். வள்ளி, தெய்வயானை சகிதமாயிருக்கும் அந்த மூல மூர்த்திக்கு அபிஷேகம் கிடையாது. புற்றிடங்கொண்ட அந்த மூர்த்திகளுக்கு புனுகுச் சட்டம் சாத்தி, கவசம் திருவாபரணங்கள், பட்டுத்துணிகள் சாத்தி அலங்கரிக்கின்றனர். ஆனால் அபிஷேகத்திற்குத் தனியாக வள்ளி தெய்வயானை சமேதராக சிறிய அளவிலே கந்தப் பெருமானை கருவறையிலே பிரதிஷ்டை செய்திருக்கின்றனர்,

அவர் கையிலே ஜபமாலையும், கமண்டலமும் காணப்படுகின்றன. பிரம்மனை சிறையிலடைத்துவிட்டு படைப்புத் தொழிலை. தானே மேற்கொண்டபோது ஏற்ற கோலமிது

கருவறையை வலம் வந்தால் தேவ கோட்ட மூர்த்திகளான கணபதி, வச்சிராயுதத்துடன் முருகன், தண்டாயுதபாணி, ஜபமாலை கமண்டலம் ஏந்திய குமரன். விஷ்ணு துர்க்கை ஆகியோரை தரிசிக்கலாம்.

உற்சவ மூர்த்திகளில் பிரணவம் உபதேசிக்கும் முருகனையும், வில்லேந்திய வேலனையும் கட்டாயம் தரிசிக்கவேண்டும் அந்த உற்சவ வடிவங்களிலிருக்கும் அழகை நேரில் கண்டால்தான் மகிமைபுரியும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. மகாமண்டபத்தின் வடகிழக்குப் பகுதியில் ஓர் அறையில் யந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இக்கோவிலில் வள்ளி, தெய்வயானைக்குத் தனிச் சந்நிதிகள் உள்ளன, கருவறையிலிருந்து தென்புறமுள்ள ஒரு வாயில் வழியாக வெளியில் வந்தால் இருபத்திநாலு தூண்களோடு கூடிய ஒரு பெரிய மண்டபம் இருக்கிறது ஒவ்வொரு தூணிலும் ஒரு கையில் கேடயமும். ஒரு கையில் வாளுமுடைய நவவீரர் முதலியோரது உருவங்களுண்டு.

முருகப் பெருமான் சூரபதுமனோடு போரிட்ட இடம் இதுவே என்று நம்பப்படுவதால் இத்தலத்திற்கு திருப்போரூர் என்ற பெயர் அமைந்தது இக்காரணம் கொண்டே வீரர்களது உருவங்களை மண்டபத் தூண்களிலே செதுக்கியிருக்கிறார்கள் என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

வெளிச்சுற்றிலே புண்யகாருண்ய வல்லியோடு வன்மீகநாதர் கோயில்

(தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க)

அன்பர்களுக்கு எமது மனங்கனிந்த சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்

குண்டூசி ஜோஸ்யர்

ஆகஸ்ட் — 1984

மேஷம்

வருமானம் அதிகரிக்கும் தொழில் முறையில் எதிர்பாராத சச்சரவுகள் அபவாதங்கள் நேரிடக்கூடிய நிலைமையும் உண்டாகலாம். உறவினர்களுடன் நெருக்கமும் செல்வாக்கும உண்டாகும். சிலர் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம். உடல்நலம் பாதிப்பு ஏற்படக் கூடுமாதலால் வைத்திய செலவுகளும் கணிசமான அளவிற்கு மேற்கொள்ள நேரிடும் பெரியோர்களின் தரிசனமும், அவர்களின் ஆசீர்வாதமும் கிடைக்க வாய்ப்புண்டாகும்.

நல்ல நாட்கள் : 1, 2, 8, 9, 10, 15, 17, 18, 23, 31

ரிஷபம்

தொழில் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் கூட்டு முயற்சியில் ஈடுபட நேரிடலாம். உத்தியோகத் துறையில் சூழ்நிலைகள் மாறி பிரகாசமான காலமாகவும் பதவி உயர்வு இடமாற்றத்திற்கு வாய்ப்புகளைத் தருவதாக அமையலாம் பகைவர்களின் எதிர்ப்புகள் இவர்களை ஒன்றும் செய்யாது. குடும்பத்தில் மகப்பேறு போன்ற சுபநிகழ்ச்சிகளும், பந்துக்கள் சேர்க்கை முதலியவைகளும் ஏற்படும். பெண்களால் விரோதம் ஏற்பட வாய்ப்புண்டு. எச்சரிக்கையுடனிருந்து அதற்கு இடமளிக்காமல் பார்த்துக் கொள்வது நலம்,

நல்ல நாட்கள் : 1, 3, 5, 10, 11, 14, 20, 25, 29

மிதுனம்

மேற்கொள்ளும் முயற்சிகளில் அலைச்சல்களிருந்தாலும் காரிய சாதனையை ஏற்படுத்தி மனமகிழ்ச்சியைத் தரும் சில நாட்கள் வரை பண நெருக்கடி நிலைமை இருந்து வரும். பொறுமை குணம் கொண்ட நண்பர்களையும் உறவினர்களையும் விலக்கிக் கொள்வது நல்லது. போட்டிபந்தயங்களை நம்புவது பயனிராது. புண்ணிய ஸ்தல யாத்திரையும் தெய்வ தரிசனமும் குடும்ப க்ஷேமத்தைப் பாதுகாக்க வகை செய்யும்,

நல்ல நாட்கள் : 5, 6, 8, 10, 16 22, 23, 29, 30

கடகம்

தொழில் துறையில் ஈடுபட்டுள்ளோர்கள் பல சிரமங்களுக்கிடை...

எல்லோருக்கும் எமது சுதந்திர தின நல் வாழ்த்துக்கள்

தயாரிப்பாளர்கள் :

எஸ். பி. எஸ். ஜெயம் அண் கோ.

(வேல் கெமிக்கல் ஓர்க்ஸ்)

25, கீழ் நாப்பாளயத் தெரு, மதுரை-1

யிலும் காரியங்களைச் சாதித்துக் கொள்ள முடியும் ஓரளவு ஆதாயம் அனுகூலமுண்டாகும் ஆயினும் எதிர்பார்த்த லாபத்திற்குப் பதில் பல சிக்கல்கள் உண்டாகும். பண நெருக்கடி இருந்தாலும் குடும்பத்தில் மனத்திருப்தி நிலவும் சிலருக்கு நவீன ஆபரணம், வாகனம் முதலியவை சேர்க்கையுண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் நல்லெண்ணத்துடன் உதவி செய்வார்கள்.

நல்ல நாட்கள் : 2, 7, 15, 18, 22, 23, 26, 29, 31

சிம்மம்

உடல்நிலை பாதிக்கப்பட்டு சீரடையும். பணப்பற்றுக்குறை இருந்தாலும் எதிர்பாராத வரவும் உண்டாகும். கடன் தொல்லைகள் நீங்கி முயற்சி வெற்றி பெறும். தொழில் விருத்தியடையும் கலைத்துறையில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு முன்னேற்றமேற்படும். தெய்வ சிந்தனை அதிகரிக்கும்.

நல்ல நாட்கள் : 1, 2, 3, 6, 10, 11, 12, 18, 22, 24, 30

கன்னி

மங்கி இருந்த அறிவாற்றல் பிரகாசிக்கத் தொடங்கும். கொடுக்கல் வாங்கலில் தடை ஏற்படாது போட்டி பந்தய லாட்டரிகளில் தன ஆதாயமேற்பட வாய்ப்பு உண்டு கலைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோர்களுக்கு எதிர்பாராத முன்னேற்றம் ஏற்படும். பெரியோர்களின் ஆசிகளைப் பெறுவதன் மூலமும் தெய்வ தரிசனம் செய்து வருவதன் மூலமும் கவலைகள் நீங்கப்பெறும்.

நல்ல நாட்கள் : 1, 3, 5, 7, 10, 12, 19, 20, 28, 29, 31

துலாம்

விசேடமான பொருள்லாபங்களை எதிர்பார்க்கலாம். பிறரிடம் அதிகார தோரணையில் காரியங்களை வெற்றி கொள்ள இயலும் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியும் உற்சாகமும் உண்டாகும், குடும்பத்தில் திருமணம் விருந்து, விழாக்கள் முதலிய சுப காரியங்கள் நடைபெறலாம். சிலருக்கு உடன்பிறந்தவர்களால் ஒரு சுபச்சிலவு ஏற்படவும் இருக்கிறது.

நல்ல நாட்கள் : 1, 9, 14, 16, 17 20, 31

விருச்சிகம்

அதிகாரிகளிடம் பணிவாகப் போதல், கௌரவக் குறைவு, உடல் நலம் பாதிக்கப்படுதல் ஆகிய சிரமமான நிலைமைகள் தோன்றலாம். பொருளாதாரம் கட்டுக்கு அடங்கியே இருக்கும் எடுத்துக்கொண்ட காரியங்கள் சிறப்பாக நடைபெறும். சிலருக்கு இட மாற்றம் ஏற்படலாம். புதிய முயற்சிகளில் அனுகூலமேற்படும்.

நல்ல நாட்கள் : 1, 8, 10, 14, 16, 17, 20, 24, 25, 27, 31

தனுசு

வாழ்க்கை வசதிகள் உயரும். குடும்பத்தில் நாகரிக பொருள் சேர்க்கை, வசதிகள் பெருகும் புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும், வீடு இடமாற்றம் செய்யவேண்டிய சூழ்நிலைகளுக்கான அறிகுறிகள் தோன்றலாம். தெய்வ தரிசனம் தீர்த்த யாத்திரை வெளியூர்ப் பயணம் முதலியவை நிகழக்கூடும். குடும்ப வாழ்க்கையில மகிழ்ச்சியும் கணவன் மனைவி உறவு களிப்புடனும் உல்லாசமாகவும் இருக்கும்.

நல்ல நாட்கள் : 6, 9, 10, 11 15, 17, 27, 30

மகரம்

கொடுக்கல் வாங்கலில் தடையும் தாமதமும் ஏற்படும். புத்திரி, புத்திரர்களால் செலவுகள் உண்டாகும் கணவன் மனைவி உறவு சௌஜன்யமாக இருக்கும். சிலருக்கு வெளியூர் வாசம் ஏற்பட்டு மனநிம்மதி இல்லாமல் இருந்துவரும். சிலருக்கு பெண்களால் கௌரவம் பாதிக்கப் படக்கூடும். வீணான விஷயங்களில் ஈடுபடாமலிருத்தல் நலம். கீழ் மட்ட மற்றும் மேல்மட்ட அதிகாரிகளால் எதிர்ப்பு ஏற்படும். எவரிடமும் நம்பிக்கை வைக்காமல் கவனமுடன் இருத்தல் நலம் கொடுக்கும்.

நல்ல நாட்கள் : 3, 6, 9, 17 21, 28, 31

கும்பம்

குடும்பச் சொத்துக்களில் பிரச்னைகள் எழலாம். மேல்படிப்பு, வெளிநாட்டுப் பயணம் முதலியவற்றில் தடைகளேற்பட்டு நிவர்த்தியடையும் வருமானம் பதவி உயர்வு, முதலானவற்றுக்கு வாய்ப்புகள் உண்டாகும், சிலரின் உடல் ஆரோக்யம் பாதிக்கப்படலாம் அரசியல் வாதிகள் கொள்கைகளை விட்டுக் கொடுத்து அனுபவ நடைமுறையில் ஈடுபடுவார்கள்.

நல்ல நாட்கள் : 1, 2, 3, 6, 7, 10 11, 15, 21, 29, 31

மீனம்

தொழில் வியாபாரத் துறையில் ஓரளவு முன்னேற்றமுண்டாகும். எடுத்த காரியங்களில் தாமதம், அதிகாரிகளின் ஆதரவின்மை, தொழிலாளர்கள் தொல்லை முதலியவற்றால் மனசஞ்சலம் உண்டாகலாம். எல்லாக் காரியங்களும் மிகுந்த பிரயாசைக்குப் பிறகே பலன் பெறும். வீடு வாசல் முதலிய கட்டிடப் பணிகள் மீண்டும் தொடர்ந்து அவைகளைக் கட்டி முடிக்க உதவிகளும் கிடைத்து விடும்.

நல்ல நாட்கள் : 4, 8, 11, 13, 15, 20, 22, 28

ஆன்மீக யாத்திரை......(10 ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளார். காசி விஸ்வநாதருக்கும் சந்நிதியுண்டு.

அடர்ந்து வளர்ந்த வன்னிமரத்தையும் தரிசித்து பிரதட்சணம் செய்யலாம்.

தினைக்கோர் காவல் கொண்ட
குறத்தேன் மாதுபங்க திருப்
போரூரமர்ந்த பெருமாளே

என்று அருணகிரிப் பெருமான் போற்றிப் பாடிய தலம் இப்புண்ணிய பூமி.

கோவிலுக்கு ஒரு கல் தொலைவில் கண்ணும்பேட்டையில் சிதம்பர சுவாமிகளின் சமாதி இருக்கிறது. சென்று தரிசனம் செய்யலாம்.

சிதம்பர ஸ்வாமிகள் பல நூல்கள் இயற்றியுள்ளார். மீனாட்சியம்மை கலிவெண்பா, நெஞ்சு விடு தூது, திருப்போரூர் சந்நிதி முறை, பஞ்சாதிகார விளக்கம், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம் போன்றவை புகழ்பெற்ற நூல்கள்.

நோயில் தளராமல் நொந்து
மனம் வாடாமல்
பாயில் கிடவாமல் பாவியேன்—
காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கி எனை ஒண்
போரூர் ஐயா ! நின்
சீரடிக் கீழ்வைப்பாய் தெரிந்து

என்று உள்ளமுருகி வேண்டுவார்.

நாமும் வேண்டுவது இதைத் தானே!

மகான் விஷ்ணு பூரி அருளிய

பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ., பி.எல்., சென்னை

பரீக்ஷித்தின் கூற்று, மேலும் பரீக்ஷித்தின் கதையை விளக்குகிறது. செய்த தவறுக்காக பரீக்ஷித்தை ரிஷி ஒருவர் சபிக்கிறார். அவன் ஏழு நாட்களுக்குள் தக்ஷகனால் கடிக்கப்பட்டு உயிர் துறக்க வேண்டும் என சபிக்கப்பட்டதால், தன் முடிவுக்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்து இவ்வுலக பந்தங்களிலிருந்தெல்லாம் விடுவித்துக்கொண்டு. ஆகாரங்கள் ஏற்காது, பகவத் சங்கல்பத்திற்கு தன்னை உட்படுத்திக்கொள்கிறான். பரீக்ஷித்தின் உயர்ந்த பக்தி பிரபாவம் அவனது ச்ரவணத்திலதான் விளக்கப்படுகிறது. சுகர் பாகவதம் கூற அதனைக் கேட்டுக்கொண்டே தனது வாழ்க்கையின் உயர்வை நிலைநாட்டுகிறான் பரீக்ஷித.

சுகர் ச்ரவணத்தின் எல்லையற்ற சுகத்தை விளக்குதல் :

அன்யேஷாம் புண்யச்லோகனும முத்தாமயசஸாம் ஸதாம்
உபச்ருத்ய பவேன்மேத : ஸ்ரீவத்ஸாங்கஸ்ய கிமபுன: 28

மகான்களின் வரலாறுகள் அவர்களுடைய தூய்மையான வாழ்வின் உயர்ந்த தன்மையை விளக்கும். அந்த புனித வரலாறுகளை கேட்கும் போது நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது அப்படியிருக்க சர்வ வல்லமை பொருந்திய பகவானின் பிரதாபங்கள் இன்னும் எத்தனையோ சிறந்த அளவிடமுடியாத சுகத்தை அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை என்கிறார் சுகமகரிஷி

—தொடரும்

அட்டைப் படம் :

காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் பூதேவி, ஸ்ரீதேவியுடன் ஸேவை சாதிக்கிறார்.

"YOU
CAN
TRUST
TVS"

We're not saying it
our customers are:-

Ask the Goverment Departmnts —
both Central and State — and
Public Sector undertakings
who come to us.
Ask truck operators in Andhra Pradesh,
Karnataka, Kerala & Tamilnadu.

Ask the Car Owners why they prefer TVS
You'll find they all say:
You can trust TVS.

YOU CAN TRUST TVS

T V Sundram Iyengar & Sons Ltd.
Madurai and Branches

பக்தியே தியாகராஜ ஸ்வாமிகளின் மூச்சு. பக்தியில்லா சங்கீதம் வெறும் அர்த்தமற்ற பொருளாக எண்ணினார் அவர். சன்மார்க்கத்திற்கு ஏற்ற ஒரு வழியாக அமைய வேண்டும் சங்கீதம் என்பது தியாகராஜரின் குறிக்கோள். அவர் சங்கீதத்தை அவ்வாறே பிரயோகித்து வாழ்ந்தார். தன் போன்ற பக்திமானாகிய ஹனுமானைக் குறித்துப் பாடுகிறார்.

ராகம் : வஸந்தவராளி — தாளம் : ரூபகம்

பல்லவி

பாஹி ராமதூத ஜகதாத்ம குமார! மாம் (பாஹி)

அனுபல்லவி

வாஹினீசதரண! தசவதனஸூனுதனுஹரண (பாஹி)

சரணம்

தருணாருணவதனாப்ஜ தபனகோடிஸம்காச!
கரத்ருத ரகுவரஸுசரண! கலிமலாப்ரகத்தவாஹ! (பாஹி)

கோரர ஸுரவாரன்னிதி கும்பதன்ய க்ருகார்ய!
பாரிஜாத தருனிவாஸ! பவனதுல்யவேக! (பாஹி)

பாதவிஜிததுஷ்டக்ரஹ! பதிதலோக பாவன!
வேத சாஸ்தர நிபுணவர்ய! விமலசித்த ஸததம் (பாஹி)

கருணாரஸ பரிபூர்ண! காஞ்சனாத்ரிஸமதேஹ!
பரம பாகவத வரேணய! வரத! த்யாகராஜனுத! (பாஹி)

ஹே ஸ்ரீராம தூதா! என்னை ஆசீர்வதி, எனக்கு ஆசி அளிப்பாயாக. சமுத்திரத்தைக் கடந்து சென்று [அக்ஷயகுமாரன் என்ற] ராவணனின் பிள்ளையைக் கொன்றவனல்லவே நீ! உனது தாமரை மலர் போன்ற

விளக்கம் :- பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை

முகமானது உதிக்கின்ற செங்கதிரைப் போன்று பிரகாசமாக விளங்குகிறது. ஆயிரம் கோடி சூரியர்களின் ஈடாக விளங்குபவன் நீ. உனது கைகளால் ஸ்ரீ ராமசந்திரரின் பாதங்களைப்பற்றி நின்றவன். கலிகாலமாகிய இரும்பினைப் போன்ற நிலையில் உள்ள பாபங்கள் மலிந்த இக் காலத்தில் வாயு மேகங்களை அழிப்பதுபோல் பாபங்களை ஓட்டும் சக்தி உனக்கே உண்டு. அகஸ்திய முனி அன்று கடலையும் குடித்தார். அது போல் ராட்சசக் கூட்டத்தை பதற அடித்து முடிவு செய்தவன் நீ.

ஹே! ராமதூத எடுத்த காரியத்தைச் சீராக முடிக்கவல்லவன் நீ. பாரிஜாத விருட்சத்தின் கீழே வாழும் நீ, காற்றையும் மிஞ்சும் வேகம் கொண்டவன். உனது கால்களின் சக்திகொண்டு கொடிய சக்திகளை வெல்பவன் நீ. பாபிகளை ரட்சிப்பவன் வேத சாஸ்திரங்களை கற்றுத் தெளிந்தவன். வாழும் உலக ஜீவ ஜாலங்கள் யாவற்றிலும் உயர்வு மிக்கவன் நீ தூய்மையான மனம் கொண்டு விளங்குபவன். கருணை நிறைந்த உள்ளம் கொண்டவன் நீ. பகவத் பக்தர்களில் முதன்மையானவன். வேண்டும் வரங்களை அளிக்கும் பிரபு என ஹனுமாரைப் புகழ்ந்து கூறுகிறார் ஸ்வாமிகள் மேலும் ஹனுமானை ஆசீர்வதிக்க வேண்டுகிறார், ஸ்ரீராம பக்த சிரோமணியான அவர்.

குண்டூசி
தனிப் பிரதி ரு. 1-50
வருட சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரு. 22

அன்பர்களுக்கு எமது மனங்கனிந்த சுதந்திர தினநல்வாழ்த்துக்கள்

குருவினுடைய சிறப்பு அம்சம்

சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீட ஸ்ரீமகாசன்னிதானம்

பகவானுடைய சக்திக்குமேல் எந்த சக்தியும் கிடையாது. அவனுடைய மாயா ஜாலமாகத்தான் இவ்வுலகமே உள்ளது. உலகமே மாயை என்றால் சிலர் நம்புவதில்லை. அப்படியிருக்கக்கூடாது நாமெல்லாம் இந்திரஜால வித்தை பார்த்திருக்கிறோம்.

ஒன்றுமே இல்லாத ஓரிடத்தில் மாமரம் ஒன்று தோன்றும். அதில் பழங்கள்கூட தொங்கும். பழங்களை சாப்பிடும் கிளிகள் போடும் சப்தமும் நமக்குக் கேட்கும் இவ்வளவையும் தார்ரோட்டின் மத்தியில் யாராவது காண முடியுமா? எல்லாம் அந்த வித்தைக்காரனின் சாமர்த்தியம்.

உண்மையில் பரம்பொருளை விட்டுத் தனியாக வேறு பொருள் எதுவும் கிடையாது அத்தகைய உயர்ந்த பரம்பொருளை அறிந்து கொண்டு இருப்பவர்தான் குரு என்கிறார் சங்கரர். குருவினுடைய சிறப்பு அம்சம் என்ன என்பதையும் அவரே கூறுகிறார்.

சிஷ்ய ஹிதாய உத்யதத' ஸததம்—சீடனின் நலனுக்காக எப்போதும் பாடுபடுபவர் குரு.

குறும்புக்காரப் பையனொருவன் ஆஞ்சநேய விக்ரஹம் ஒன்றைப் பார்த்தான் நீளமான வாலின் நுனியில் ஒரு மணி இருந்தது. அந்த மணியின் உள்ளே கையை விட்டான். ஐயோ என்று முகத்தைச் சுளித்தபடி கையை எடுத்தான்.

இதைக் கவனித்த இன்னொரு பையன், ஏன், என்ன ஆயிற்று? என்று கேட்டான். அதற்கு, நீயும் வைத்துப் பார், என்றான்.

அந்தப் பையனும் பயப்படாமல் கையை மணிக்குள் வைத்தான். கடைசியில் அவனும் ஐயோ என்று கத்திக்கொண்டு அலறியபடி கையையெடுத்தான். ஏனென்றால் உள்ளேயிருந்த தேள் ஒன்று கொட்டிவிட்டது.

கெட்ட குணமுள்ள பையன் எப்போதும் தான் அனுபவித்த கஷ்டம் போதாதென்று மற்றவனுக்கும் கஷ்டம் கொடுப்பான் நல்ல பையனாக இருந்தால், மற்றவனுக்குக் கஷ்டம் வரக்கூடாது என்று நினைப்பான்.

தான் கஷ்டம் அனுபவித்தால் மற்றவரும் கஷ்டம் அநுபவிக்க வேண்டும் என்று எண்ணுவது மனித இயல்பு.

ஆனால் உத்தம தத்துவஞானியான குரு நாம் அநுபவித்த ஆனந்தம் மற்றவருக்கும் கிடைக்க வேண்டும் எல்லாரும் ஞானம் பெற்று இறையருள் பெறவேண்டும் என்று இயற்கையாக எண்ணுவார். குருவின் தயையால் அந்தப் பாக்கியம் சத்தான சீடனுக்கும் கிடைக்கும்.

குருவின் பெருமையை உணர்ந்த சங்கரர் குருவுக்கு உவமையாகச் சொல்ல உலகில் ஒன்றுமே இல்லை என்கிறார்.

த்ருஷ்டாந்தோ நைவ
த்ருஷ்ட : திரிபுவன
ஜடரே ஸத்குரோர்
ஞானதாது '

ஸ்பர்சஸ்சேத் தத்ர கல்ப்ய: நயதி
யதஹோ ஸ்வர்ணதாம்
அச்மஸாரம்
ந ஸ்பர்சத்வம் ததாऽபிச்ரித
சரணயுகே
ஸத்குரு : ஸ்வீய சிஷ்ய
ஸ்வீயம்ஸாம்யம் விதத்தே நிருபம்
தேன வா லெளகிகோऽபி

ஞானத்தை வழங்கிய ஸத்குருவுக்கு ஏதாவது உவமை சொல்ல முடியுமா? ஆராய்ந்து பார்ப்போம்.

பழங்காலத்தில் ஸ்பர்சமணி என்ற பொருள் ஒன்றுண்டு அது தன்னுடன் தொடர்பு கொள்ளும் எந்த இரும்புத் துண்டையும் தங்கமாக்கிவிடும் சக்தி படைத்தது இரும்பைத் தங்கமாக்குவதுதான் ஸ்பர்சமணிக்குச் சாத்தியமாகுமே தவிர, அந்த இரும்பைத் தன்னைப் போன்ற இன்னொரு ஸ்பர்சமணியாக மாற்றமுடியாது

ஆகவே, மிக உயர்ந்த பொருளான ஸ்பர்சமணியைக்கூடக் குருவுக்கு உவமையாகக் கூறமுடியாது என்கிறார் ஏன்?

குருவானவர் தம்மை நாடி வரும் சீடனை தம்மைப் போலவேஉயர்ந்த குருவாகவே, பரமஞானியாகவே மாற்றிவிடுகிறார் உலகிலும் இந்த உண்மையை நாம் நடைமுறையிலே பார்க்கிறோம்.

பள்ளியில் படித்து முடித்து விட்டு, கல்லூரியிலும் தேர்ச்சி பெறும் மாணவன் பிறகு தன் ஆசிரியரைப் போலவே தானும் ஓர் ஆசிரியராகவோ, பேராசிரியராகவோ ஆவதை நாம் காண்கிறோம் உலக விஷயமான கல்வியைக் கற்றுக்கொடுக்கும் ஆசிரியரே, தம் மாணவனையும் தம்மைப்போலவே ஓர் ஆசிரியராக மாற்றிவிடுகிறார்.

ஆகவே சாதாரண ஓர் ஆசிரியருக்கே நாம் ஸ்பர்சமணியின உதாரணத்தைக் கொடுக்க முடியாது. அப்படியிருக்கையில், பிரம்ம ஞானத்தைச் சீடனுக்குப் புகட்டும் ஆசார்யரின் விஷயத்தில் எந்த உதாரணத்தைத்தான் தரமுடியும்?.

ஆதி சங்கரரும் இப்படித்தான் நம்மைக் கேட்கிறார்.

ஒரு வக்கீலைப் பார்க்க, நல்லவர், திருடர்கள். கொலை செய்தவர்கள் ஆகிய பலதரப்பட்ட மக்கள் வருவார்கள். ஆகவே வக்கீல் கேட்

எமது மனங்கனிந்த சுதந்திர திருநாள் வாழ்த்துககள்
திருமண பட்டு ஜவுளி ரகங்களுக்கு
கரணா ஜவுளி மாளிகை
ராஜ வீதி - கோயமுத்தூர். போன்: 22881
Karana CLOTH PALACE

ரசத திருட்டுமுறைகளே இருக்
சது.

வக்கீலுடைய வேலை தம்மை
ாடி வரும் கட்சிக்காரர்க்கு வெற்
லையைத் தேடி தருவதுதான். தம்
ட்சிக்காரருக்குச் சாதகமாக நீதி
ன்றத்தில் பேசி வெற்றி பெறுவது
ான். அதனால் அவர் எவ்வளவு
ழக்குகளைப் பார்த்தாலும் அவர்
ளைப்போல் தாமும் தீயவனாகமாற
வண்டும் என்று எண்ணமாட்
ார் அவருக்குப் பல தரப்பட்ட
க்களுடன் பழகிப் பழகிப் பயிற்சி
ஆகிவிட்டிருக்கும்.

அதுபோல ஸத்குருவானவர் தம்
றடைய சீடர்களைத் தவறான வழியி
ருந்து விலக்கி அவர்களையும் தம்
மைப்போலவே சன்மார்க்கத்துக்
திருப்புவாரே தவிர, தாம் கெட்ட
வழிக்குச் செல்ல மாட்டார். உலகம்
எப்படியிருந்தாலும் மற்றவர்களை
நல் வழிக்குத் திருப்புவதையே
கடமையாகக் கொண்டிருப்பவர்
ஸத்குரு.

சிறு குழந்தைக்கு அ என்னும்
எழுத்தை தந்தை கற்று தருகிறார்.
அப்போது அவர் தாம் குருவின்
நிலையை வகிக்கிறார். குருவின்
தேவை இவ்வாறு மிகச் சிறிய விஷ
யத்திலிருந்து, மிக நுட்பமான தத்
துவஞானம் வரை ஒவ்வொருவருக்
கும் அவசியமாகிறது. ஆகவே குரு
வின் திருவடிகளைப் பணிந்து
போற்றி நாம் உய்வோமாக!

தொகுப்பு : சேது, சென்னை

ஒருவனுக்கு உணவளிப்பதைவிட, அதை அவனே தேடிக்கொள்ள வழி காட்டுவதே முக்கியம்
—சோவியத் நாட்டு பழமொழி.

Single Phase CENTRIFUGAL
MONOBLOC PUMPS



- PUMPSETS ARE COMPACT
- LIGHT IN WEIGHT
- IDEAL FOR GARDEN and DOMESTIC USE

MANUFACTURERS

SANDHYA
INDUSTRIES

27-1-A, East Periasamy Road, R. S. PURAM, COIMBATORE-2
Phone : 22471 & 24997

ஐந்தாம் அத்தியாயம்

கர்ம—ஞான யோகம்

முந்தைய அத்தியாயத்தில் அர்ஜுனன் கண்ணனைப் பார்த்துக் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்த கண்ணன், உனக்கு கர்மயோகமே சிறந்தது. ஆகவே நீ யுத்தம் செய் என்றான்.

ஆனால் அப்படியும் அர்ஜுனனுக்குச் சந்தேகம் தீரவில்லை. பகவானே குருவின் ஸ்தானத்திலிருந்து உபதேசிப்பதால் சிஷ்யனுகிற அர்ஜுனன் தன் சந்தேகங்களைத் தெரிவித்து விளக்கம் கேட்பதும் பொருத்தமானதே.

ஆர்ஜுன உவாச : அர்ஜுனன் சொன்னது :

ஸந்ந்யாஸம் கர்மணாம் க்ருஷ்ண புநர் யோகஞ்ச சம்ஸஸி
யத் ச்ரேய ஏதயோரேகம் தந்மே ப்ருஹி ஸுநிச்சிதம்

கண்ணா! சகல கர்மங்களையும் விட்டு ஞான யோகத்தினால் ஆத்ம தரிசனம் பெற்று மோக்ஷம் பெறலாமென்றாய். மறுபடியும் கர்ம யோகமே சிறந்தது, அதைச் செய் என்கிறாய். இவ்விரண்டில் எது சிறந்தது என்று ஒன்றை உறுதியாகச் சொல்வாய் என்றான்.

ஸ்ரீ பகவான் உவாச : பகவான் சொன்னது.

ஸந்ந்யாஸ : கர்மயோகச்ச யச்ச்ரேயஸ கராவுபௌ
தயோஸ்து கர்ம ஸந்ந்யாஸாத் கர்மயோகோ விசிஷ்யதே

அர்ஜுனா! சந்யாசமெனப்படும் ஞானயோகமும் கர்மயோகமும் இரண்டுமே ஆத்ம தர்சனத்தை யளிக்கக்கூடியவை. ஆனால் ஞான யோகத்தைவிட கர்மயோகமே சிறந்தது.

வைரம் ராஜகோபால்

ஞானயோகம், கர்மயோகம் இரண்டும் தனித்தனியே ஒரே பலனைத் தருவதால் இரண்டும் ஒன்றே எனலாம். ஆனால் முதலில் கர்மயோகத்தை செய்து மனச் சுத்தி பெருமல் ஞானயோகம்செய்ய இயலாது.

இவன் ஆத்மாவின் யதார்த்த ஞானத்தைப் பெற்று பரிசுத்த ஆத்மாவின் தர்சனம் பெறுகிருன். ஒருவன் கஷ்டப்பட்டு புலன்களை யடக்கி, நீண்ட காலம் கழித்து, பொறுமையோடிருந்து ஆத்ம தரிசனம் பெறும் ஞானயோகத்தைக் காட்டிலும் சுலபமாகவும் விரைவாகவும் அதே பலனை அடையக் கூடிய கர்மயோகமே சிறந்தது.

யோக யுக்தோ விசுதாத்மா விஜிதாத்மா ஜித்தேத்ரிய :
ஸர்வ பூதாத்மா பூதாத்மா குர்வந் நபி ந லிப்யதே

யோகயுக்த—கர்மயோகம் செய் பவன், விசுதாத்மா—மனத்தூய்மை பெற்றவனும், விஜிதாத்மா— மனதை உலக விஷயங்களில்போக விடாமல், ஜித்தேந்திரிய—எளிதில் புலனடக்கம் பெற்றவனும், ஸர்வ பூதாத்ம பூதாத்ம—எல்லா உடலிலும் உள்ள ஜீவாத்மாக்கள் ஒன்று போன்றதே என அறிந்து, குர் வந் அபி—கர்மாக்களை செய்து வந்தாலும், நலிப்யதே—சரீரமே ஆத்மா என்று கலங்கமாட்டான்.

கர்மயோகி தன் வர்ணாச்ரம தர்மத்தை ஒட்டிய எல்லாக் கர்மாக்களையும் செய்துவருவான், தனக்கு இயல்பான செயலைச் செய்வதால் மனத்தையும் புலன்களையுப் வெல்லுகிருன், தேவன், மனிதன், மிருகம், பறவை என்கிற வேற்றுமையெல்லாம் சரீரத்தைப் பற்றியவையே ஆத்மாவைச் சார்ந்தல்ல

எல்லா சரீரங்களிலுமுள்ள ஆத்மாக்களும் எக்காலத்தும் ஒரேவடிவாய், ஞானஸ்வரூபமாய் எப்போதுமுள்ளவையென்று அவன் சதா சிந்தித்திருப்பதால் எல்லாக் கர்மாக்களையும் அவன் செய்து வந்தாலும், சரீரமே ஆத்மா என்ற அஞ்ஞானத்தினுல் கட்டுபடமாட்டான், ஆதலால்விரைவில் ஆத்மஸாசாட்த்காரம் பெறுகிருன்.

எல்லா இந்திரியங்களின் செயல்களுக்கும் காரணம் மனம். அந்த மனம் ஜெயிக்கப்பட்டால், ஞானேந்திரியங்களான மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலன்களையும் கர்மேந்திரியங்களான கை கால் போன்றவைகளை வென்றவனுகி ஜிதேந்திரியன் எனப்படுகிருன்.

எல்லா சரீரங்களிலுமுள்ள ஆத்மாக்கள் ஒரே மாதிரியானவை சரீர சம்பந்தத்தை விலக்கிப் பார்த்தால் எல்லா ஆத்மாக்களும் அணுவாய், நித்யமாய், ஜ்ஞானநந்தஸ்வருபமாய் ஒரே மாதிரி இருப்பது தெரியும் ஆத்ம யதாத்ம்ய ஞ்ஞானம் பெற்ற கர்மயோகி, காண்பது,கேட்பது, எடுப்பது, நடப்பது முகர்வது, ருசிப்பது எல்லாமே, இந்த்ரியார்த்தேஷு இந்த்ரியாணி வர்த்தந்தே என்றபடி அந்தந்த அவயவங்கள் அந்தந்த வேலைகளைச் செய்கின்றன என்றே நினைக்கவேண்டும்.

அஹம் கிஞ்சித் நைவ கரோமி நான் அவைகளை செய்கிறவன் அல்ல என்றும், இந்த இந்த்ரியங்கள் அவைகளின் பூர்வஜென்ம வாசனைக்கு ஒப்ப இப்போது காரியங்களைச் செய்கின்றன இவைகளில் எனக்குத் தொடர்பு எதுவுமில்லை என்று தன்னை அகர்த்தாவாக (கர்மாவைச் செய்யாதவனுக) நினைக்கவேண்டும்.

எமது மனங்கனிந்த சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்

சென்டெக்ஸ்

கைத்தறி துணிகள்

எங்கள் பிரத்யேக ஷோ ரூம்களுக்கு விஜயம் செய்யுங்கள்

உம்மிடியார் அங்காடி மையம்
811, அண்ணா சாலை, சென்னை-600 002

சென்டெக்ஸ் ஷோ ரூம்
(ஏஜண்ட் : Messrs. ஸ்ரீ. தனலட்சுமி)
13, மேற்கு சித்திரை வீதி, மதுரை–625 001

நீல்கிரீஸ் டெக்ஸ்டைல்ஸ்
நீல்கிரீஸ் பில்டிங்ஸ், 11, பிரிகேட் ரோடு, பெங்களூர்-1

சென்டெக்ஸ் ஷோ ரூம்
எம். ஜி. சி. மார்க்கெட், சிராலா, ஆந்திர பிரதேஷ்

மற்றும் எங்கள் தலைமை அலுவலகம்—சென்னிமலை

சென்னிமலை

நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்

சென்னிமலை

M. P. நாச்சிமுத்து, B. A., B. L. —தலைவர்

முற்பிறவியில் செய்த வினைப் பயன்கள் இப்போது புலன்களுடன் கூடி எல்லா செயல்களையும் செய்கின்றன. ஜீவன் தன் இஷ்டப்படி ஏதையும் செய்வதில்லை.

கர்மயோகிகள், ஆத்மாவுக்குத் தங்கள் பழமையான கர்மபலன் விலக, தங்கள் உடல், மனம் புத்தி புலன்களால், பலனில் இச்சையின்றி கர்மாக்களைச் செய்வார்கள்.

இப்படிச் செய்பவர்கள் சுகமான ஆத்மானுபவத்தைப் பெறுகிறார்கள். அப்படியின்றி பயனை இச்சித்து கர்மயோகம் செய்பவர்கள் அக்கர்ம பலன்களினால் கட்டுண்டு, நித்ய சம்சாரிகளாகவே இருப்பர்.

ஒருவன் தனக்குகந்தவர்களின் துக்கத்தைப் போக்கவோ, சுகத்தைக் கெடுக்கவோ கர்மாக்களைச் செய்து அதன் பலனை அனுபவிக்க பல பிறவிகள் எடுக்கின்றன.

இந்த மாதிரி மனைவி மக்களோ விரோதிகளோ வேறு. பகவான் ஒருவனே எப்போதும் உள்ள உறவினன். பரிசுத்தனான ஜீவன் தன் ஞான ஒளியினால் எங்கும பிரகாசிப்பவன். ஆனால் சம்சார பந்தத்தினால் சரீரத்திலிருக்கும் அந்த ஜீவனுக்கு ஞானம் சுருங்கி தன் சரீரத்தின் அளவே பரவி, நான் தேவன், நான் மனிதன் என்று தன் சரீரத்தையே ஆத்மாவாக எண்ணி அதற்கேற்றாற்போல் கர்மாக்களைச் செய்கிறான். ஆதலால மறுபிறவியிலும் இந்த கர்ம பந்தம் தொடர்கிறது.

இப்படியே பல பிறவிகள் எடுக்கிறான் சம்சார தசையில் ஆத்மாக்கள் பல என்பது அஞ்ஞானத்தினால் தோன்றுகிறது. அஞ்ஞானம் நீங்கிய முக்தி தசையில் எல்லா ஆத்மாக்களும் ஒன்றேயென்று தெரியும். இப்படி ஆத்ம ஸாம்யத்தில் எவருடைய மனம் நிலைத்திருக்கிறதோ அவர்களால் கர்மயோகம் செய்யும்போதே சம்சார பந்தம் நீங்கி ஆத்மாவான ப்ரஹ்மத்தில் லயித்திருப்பார்கள்.

எந்த கர்மயோகி உலக விஷயங்களில் மனதைச் செலுத்தாமல் தன் ஜீவாத்ம ஸ்வரூபத்தையே நினைத்திருந்து அதிலேயே எல்லா இன்பங்களையும் பெறுகிறானோ அவனே ஆத்ம தரிசனத்திற்கு முயல்வதில் வெற்றிபெற்று நித்யானந்தமடைவான். காமக்ரோதங்கள் அற்று, உலக சுகங்களில் பற்றற்று தன் மனத்தை ஆத்மாவிடமே நிலைக்கச் செய்யும் கர்மயோகி எங்கிருந்தாலும் ஆத்மானுபவ சுகத்தையே அடைகிறான்.

போக்தாரம் யக்ஞதபஸாம் ஸர்வலோக மஹேச்வரம்
ஸுஹ்ருதம் ஸர்வபூதானாம் ஜ்ஞாத்வா மாம் சாந்திம் ருச்சதி

நாம் செய்யும் யாகம், யக்ஞம் எல்லாமே பகவானை போய் சேருகிறது. அதனால் பகவான் உகந்து நமக்கு நன்மை செய்கிறான். (அந்த பகவானே இப்போது கிருஷ்ணனாக வந்துள்ளான்.

நாம் செய்யும் கர்மாக்களின் பலனை அவனுக்களித்துவிட்டால் ஆத்மசாந்தி ஏற்படும் ஆகவே. அவனே எல்லாவற்றிற்கும் நாயகனென்றும், எல்லாமே அவனுக்கென்றும் எண்ணி கர்மாவைச் செய்பவன் மோக்ஷம் பெறுகிறான்.

—தொடரும்

அமரர் கவிசேரி சுப்ரமண்ய சாஸ்திரிகள்

101

துரியோதனன் தருமபுத்திரரிடம் ராஜசூய யாகத்தின் பின்பு மிகவும் பொறாமை கொண்டான். முன்பொரு சமயம் ருக்மணியின் கல்யாணத்தின்போது ஜராசந்தனை வதம் செய்தான்.

அப்போது சிசுபாலனின் தோழனாகிய சால்வன் என்பவன் யாதவர்களைப் பூண்டோடு அழிக்கிறேன் என்று சபதம் செய்தான், பிறகு சால்வன் தினமும் புழுதியைமட்டும் தின்று ஒரு வருஷகாலம் ஈசுவரனை ஆராதித்தான் பரமேசுவரன் சந்தோஷமடைந்து வரமளிக்க முன் வந்தார்.

சால்வன் அவரிடம் தேவர், அசுரர், மனிதர், கந்தவர்கள், உரகர்கள், ராக்ஷதர் இவர்களால் அழிக்க முடியாததாயும், நினைத்த இடத்திற்குச் செல்லக்கூடியதான ஒரு விமானம் வேண்டுமென்று வரம் கோரினான்.

மயனுக்கு உத்தரவிட்டு ஈசுவரன் இரும்பினால் செய்த சௌபம் என்ற ஒரு விமானத்தை அளித்தான்.

இந்த விமானத்தைப் பெற்ற சால்வன் துவாரகையில் சென்று விருஷ்ணிகளை அழிக்க எண்ணினான். கண்ணிற்குத் தென்படாமலும் இருள் சூழ்ந்து விளங்குவதாயும், கிட்டே அண்டமுடியாததுமான அந்த விமானத்துடன் பெரும் சைன்யத்தையும் அழைத்துக் கொண்டு துவாரகை நகரை முற்றுகையிட்டான்.

தோட்டங்களையும், காடுகளையும் அழித்தான். கோபுரங்களை தகர்த்தான். மாடிகளை இடித்தான். வாசற்படிகளை உடைத்தான் பெரும் மாட மாளிகைகளைசின்னாப்பின்னப் படுத்தினான். கேளிக்கை அரங்கங்களையெல்லாம் தரை மட்டமாக்கினான். பல ஆயுதங்களை விமானத்திலிருந்து வீசி, மரங்கள், பெரும் தூண்கள், மாயையால் இடி, மின்னல், ஆலங்கட்டிகள், சுழற்காற்று முதலியனவும், பாம்புகளும், மணல் காற்றும் வீசப்பட்டன. எல்லாம் ஈசுவரன் கொடுத்த விமானத்திலிருந்து விழுந்தன. தூளியினால் திக்குகள் மறைக்கப்பட்டு விளங்கியது துவாரகை

துவாரகையில் ஜனங்கள் சிரமப் படுவது கண்ட பிரத்யும்னன் அவ

தொகுப்பு : பி. எஸ். பரமேஸ்வரன், பி.ஏ.,பி.எல்., சென்னை.

களுக்குத் தைரியம் கூறி, ரதத்திலேறி யுத்தத்திற்கு வந்தான். அவனுடைய சகோதரர்களும் சைன்யங்களுடன் தொடர்ந்தனர். சால்வனுக்கும் இவர்களுக்கும் யுத்தம் தேவாசுர யுத்தம் போன்று நிகழ்ந்தது

சால்வனின் மாயாஜாலங்களை பிரத்யும்னன் உயர்ந்த அஸ்திரங்களைப் பிரயோகித்து அடக்கினார். சூரிய காந்தி இருளை ஒழிப்பது போன்று இது நிகழ்ந்தது இருபத்தைந்து தங்கப்பிடியோடு கூடிய கூரிய பாணங்களால் சால்வனின் சேனாதிபதியை முறியடித்தார் பிரத்யும்னன் பின்பு சால்வனை நூறு பாணங்களாலும், அவனதுசேனையிலுள்ள ஒவ்வொருவரையும் தனித்தனி பாணங்களாலும், ரதங்களை மும்மூன்று பாணங்களாலும் அடித்தார். இருதரப்பு சைன்னியங்களும் மெச்சும் விதமாகப் போர்புரிந்தார் பிரத்யும்னன்.

மயனால் கொடுக்கப்பட்ட விமானம் பல ஜாலங்களை செய்து போரில் சுழன்று வந்தது. சில சமயம் பல விமானங்களாகவும், சில சமயம் ஒன்றாகவும், மலையிலும் ஜலத்திலும் தோன்றி மறைந்து யுத்தத்தில் பங்கேற்றது அந்த விமானம், யாதவ சேனாபதிகள் அந்த விமானம் [தென்பட்ட திக்கெங்கிலும் பாணங்களை வர்ஷித்தனர்.

இந்த பாணங்கள் தேஜசுடனும், சர்ப்பம் போன்றும், அக்னி போன்றும் சென்று சால்வனையும், அவனது விமானத்தையும் சேனையையும் தாக்கின. தாக்குண்ட அவர்களும் யுத்தத்தை விட்டு ஓடாது மேலும் வீரத்துடன் சண்டை செய்தனர் இவ்வுலகில் கீர்த்தியும் பரலோகத்தில் சுகமும் வேண்டியவராய்.

த்யுமான் என்ற சால்வனின் மந்திரி பிரத்யும்னரை தனது இரும்பு கதையால் மார்பிலடித்து மூர்ச்சையடையச் செய்தான். தாருகபுத்திரனாகிய பிரத்யும்னனின் சாரதி அப்போது யுத்ததர்மம் அறிந்தவனாய் பிரத்யும்னரை வேறு இடத்திற்குக் கொண்டு சென்றான். ஒரு சில நிமிஷங்களில் மயக்கம் தெளிந்த பிரத்யும்னர் அவனை நோக்கி யுத்த களத்தைவிட்டு தன்னை அழைத்து வந்தது அபகீர்த்திக்குரியது எனக் கூறியதோடு தான் கிருஷ்ணரிடமும், பலராமரிடமும் என்ன சொல்வது? என வினவினார்.

மற்றவர்களும், சகோதரரின் மனைவியரும் தன்னைக் கேட்பார்களேயென்றான். அப்போது தாருக புத்திரனாகிய சாரதி யுத்த தர்மத்தைக் கூறி அவரை மனம் சாந்தமடைய செய்தான்,

சாரதிக்கு ஆபத்து ஏற்படின், ரதத்தில் வீற்றிருப்பவனும், ரதத்தில் வீற்றிருப்பவனை சாரதியும் யுத்தத்தின்போது ஆபத்து காலத்தில் காப்பது யுத்த தர்மமாகும் என போதித்தான் அப்போது பிரத்யும்னர் கதையால் அடிபட்டு மூர்ச்சையுற்றிருந்ததால் காப்பது தனது கடமை எனச் சுட்டிக் காட்டினான் அந்த சாரதி

மயக்கம் தெளிந்த பிரத்யும்னர் தனது சாரதியை த்யுமானுடைய சமீபத்திற்கு தனது ரதத்தைச் செலுத்தும்படி கூற, அவ்வாறே ரதத்தை ஓட்டிச் சென்றார். எட்டு கொடிய பாணங்கள் கொண்டு த்யுமானை அடித்தார். அவனது குதிரைகளை நான்கு பாணங்கள் கொண்டும், சாரதியை ஒரு பாணத்தாலும், கொடியை ஒரு பாணத்தாலும் வீழ்த்தி, மேலும் ஒரு பாணம் கொண்டு த்யுமானின் தலையைக் கொய்தார் இவ்வாறு யாதவ சைன்யங்களும், சால்வனுடைய சேனைகளும இருபத்தேழு நாட்கள் யுத்தம் செய்தன. அந்தச் சமயம் ஸ்ரீகிருஷ்ணர் துவாரகையில் இல்லை. —தொடரும்

பேசும் வரதர்

T. T. வரதராஜன், B.A., B Com.

காஞ்சி மாநகரமே துயில்கொண்டிருக்கும் இரவுநேரம் பேரருளாளனின் திருக்கோயிலின் பிரம்மாண்டமான வெளிக் கதவுகள் தாளிடப்பட்டிருக்கும் கருவறையில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளியிருக்கும் தேவாதிராஜன் வரதராஜன் திருக்கதவம் மட்டும் ஒருக்களித்தவாறு சாத்தியிருக்கிறது.

திருக்கச்சி நம்பிகள் சற்றும் கண்ணயராது தேவாதிராஜனின் திருமுன்பே நின்று வழக்கமாகச்செய்து வரும் திருவாலவட்டங்களை, அன்று காலையில் நடந்த நிகழ்ச்சி ஒன்றை மனதில் அசைபோட்டவாறு சாந்தமாக வீசுகின்றார்.

அன்று காலை வழக்கம்போல் கோவிலுக்கு சமீபத்திலிருக்கும் வேகவதி ஆற்றங்கரையில் தீர்த்தமாடி, அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு மாடவீதி வழியே இறைவனின் நாமாக்களைச் சொல்லிக்கொண்டு வந்துகொண்டிருந்தார்.

தினமும் அவ்வழியே செல்லும் திருக்கச்சி நம்பிகளின் பெருமையை அவ்வூர் மக்கள் யாவரும் நன்கறிவர். பரமபக்தியுடன் இடைவிடாது பூத்தண்மையிலிருந்து தினமும் நடத்தே வரும் அருளாளனுக்கு ஆலவட்டம் வீசுகின்ற நம்பிகளின் பக்தி நிலையை உணர்ந்து, அர்ச்சாவதார நிலையையும் கடந்து அவருடன் நேருக்கு நேர் உரையாடி நிற்பான் இறைவன். இதனையறிந்து வியந்திருந்த தொண்டர்குல பாகவதன் ஒருவன் அன்று அவர் வரும் வழியில் ஏங்கிக் காத்திருந்தான்.

நம்பிகள் அவனைக் கடந்து செல்லுமுன்பு கிடையற்ற மரம் போல் அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். அவரது திருவடிகள் பட்ட மணலை எடுத்துத் தன் தலையில் போட்டுக்கொண்டான். சற்றே வியந்து நின்றார் நம்பிகள்.

அன்பனே! நீ இவ்வாறு 'செய்வதேன்? ;என்று துணுக்குற்று வினவினார். அவனைத் தன் இரு கைகளாலும் பிடித்து எழுப்பினார். அடியவனோ மிக்க மகிழ்ச்சியுடன் சாவதானமாகக் கூறினான்.

ஐயனே, பேரருளாளனுக்கு ஆலவட்டம் வீசும் பெரும்பாக்கியம் பெற்றதுமல்லாமல் அவருடன் நேருக்கு நேர் உரையாடும் பேற்றினைப் பெற்றவர் நீர். யானோ, எவ்விதப் பேறும் பெறாத தாழ்ந்த குலத்தினன். ஆதலால் நின் பாத தூளி படுதலால் அடியேன் மிக்க பாக்கியம் பெற்றேன் என்றான்.

சிறிது இடைவெளிக்குப்பின் மீண்டும் அவனே தம் மனத்து அவாவினை நம்பிகளிடம் வெளியிட்டான்.

பெரியோய்! அடியேனுக்கு இறையுணர்வு தலைவிஞ்சி நிற்கிறது. எவ்வாறேனும் இறைவனின் திருவடிகளை அடைந்துவிட வேண்டுமென்ற பேரவா என்னுள்ளத்துள் எப்போதும் எழுந்து கொண்டேயிருக்கிறது.

எளியேனாகிய எனக்கு மோக்ஷம் கிட்டுமா? என அருளாளனிடம் வினவி அறிந்து வருவீராக எனத் தயங்கித் தயங்கிக் கேட்டான். உடனே அவரும் அதைக் கேட்டறிந்து வருவதாகக் கூறி வந்து சேர்ந்தார்.

இப்போது அதையெண்ணி எவ்வாறு கேட்பதென்று இவர் தயங்கி நிற்கிருர். நம்பிகளின் திருமுகக் குறிப்பில் மாறுதலை உணர்ந்த மாயவன், நம்பி, நின் முகத்தைப் பார்க்கும்போது ஏதோ கேட்க விரும்புவதாகத் தோன்றுகிறதே! ஏதாயினும் தயங்காமல் கேள், என்ருர்.

நம்பிகளும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, ஸ்வாமி! வேகவதி ஆற்றங்கரையில் வாழும் தொண்டர் குல பக்தனொருவன் தனக்கு மோக்ஷம் சித்திக்குமா? என்று கேட்டு வரச் சொன்ஞன். அதற்குத தங்களின் உயர்த்த பதிலைஎதிர் நோக்குகிறேன் என்ருர்.

உடனே கணத்தில் அருளினுன், தேவராஜன். நம்பீ, எமது தொண்டன் நீ. தொண்டர்க்குத் தொண்டனை அவனுக்குத் தவருது மோக்ஷமளிப்பேன்.

பதிலை அறிந்துகொண்ட நம்பி எப்பொழுது காலை விடியும் என்றிருந்தார் பொழுது புலருமுன்பே தொண்டர்குல அடியவனை நோக்கிச் சென்று அருளாளன் சொன்ன சொல்லை அவனிடம் கூறினுர். மிக்க மகிழ்ச்சியுற்ருன் அவன்.

மீண்டும் அவன் முகத்தில் ஒரு கேள்விக்குறி தொக்கி நின்றது.

உனக்குத்தான் மோக்ஷகதி உண்டு என்பதைக் கேட்டுச் சொன்னேனே, இன்னும் என்ன கேள்வி கேட்கப் போகிருய்? என்று சற்று வேகமாக வினவினுர் நம்பி.

ஐயா, ஒரு சிறு சந்தேகம்! தங்களுக்கும் மோக்ஷம உண்டா? என்று கேட்டுப் பாரும், உம் பெருமாளிடம், என்று கூறி நெளித்தான் தொண்டன். ஒரு நகைப்புடன் கேட்டுப் பார்க்கிறேன் என்று கூறி அவ்விடத்தை விட்டகன்ருர் நம்பி.

எல்லோருக்கும் எமது சுதந்திர தின நல் வாழ்த்துக்கள்

கோவையில் 105 ஆண்டுகளுக்கும் மேலாக
நெய்யினுல் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகளுக்கு
பெயர் பெற்ற ஸ்தாபனம்

ORIGINAL VISWANATHA IYER GHEE SWEETS

ஒரிஜினல் விஸ்வநாத அய்யர்

நெய் மிட்டாய்க் கடை

164, ராஜ வீதி : : கோயமுத்தூர்-1

போன் : 25651

மீண்டும் அன்று இரவு பெருமாளுக்கும் ஆலவட்டம் வீசும்போது நம்பியின் முகத்தில் ஒரு சிந்தனைக் கீற்று. புன்னகைத்தான் இறைவன்.

என்னிடம் கேட்கத் தயக்கமென்ன, கேள், என்று பொருள்பட இருந்தது அப்புன்னகை. நம்பி மெதுவாகத் தொடர்ந்தார்.

ஸ்வாமி.........அடியேனுக்கு மோக்ஷம் உண்டா? என்று தெரிந்துகொள்ள ஆசை

நிச்சயம் இல்லை, பட்டென்று. பதில் வந்தது பெருமாளிடமிருந்து திடுக்கிட்டுப் போனார் நம்பிகள்.

ஸ்வாமி! ஆளவந்தார்எனப்படும் மகாபுருஷரை ஆசாரியனாகப் பெற்ற அடியேனுக்கு மோக்ஷம் கிட்டாதோ? அதுவுமின்றி நித்ய கைங்கர்யமாக உமக்குத் திருவாலவட்டம் செய்துவரும் அடியேனுக்கு மோட்ச ப்ராப்தி கவாதோ? மனம் நொந்து கேட்டார் நம்பிகள்.

பரிதாபப்பட்டார் பெருமான் அதே நேரத்தில் தீர்க்கமாகக் கூறினார்.

நம்பீ! மோட்ச ப்ராப்தியடைய ஆசார்ய பக்தி மட்டும் போதாது. நீ எனக்கு அபிமானவன்தான். ஆனால் பாகவத அபிமானம் உடையவனாக இல்லையன்றோ! நீ எனக்கு ஆலவட்டம் வீசினாய் நான் அதற்கு கைம்மாறாக அர்ச்சைநிலையினின்றும் இறங்கி உன்னுடன் பேசினேன். நீ வீசியதற்கும் நான் பேசியதற்கும் பலன் கிட்டிற்று மோட்சம் பெற பாகவத அபிமானத்தைப் பெறுக என்றார்.

மௌனமானார் நம்பிகள். உண்மைப் பொருளை உணர்ந்துகொண்ட அவர் பாகவத அபிமானம் பெறும் பொருட்டு ஆளவந்தாரின் சிஷ்யரான பெரிய நம்பிகளை அடையத் திருவரங்கம் கிளம்ப அன்றே தன்னைச் சித்தம் செய்துகொண்டார்.

ஸ்ரீ தேவி கருமாரிதாசர் வீட்டுத் திருமணம்

ஆன்மீக உலகில் ஸ்ரீ கருமாரி தாசர் அவர்களை தெரியாதவர்கள் இருக்க முடியாது. சிறந்த தேவி உபாசகர். ஸ்ரீதாசர் அவர்களுடைய அன்புமகன் சிரஞ்சீவி அருணகிரிக்கும், திருவூர் திரு. டி. சுப்பராயபிள்ளை அவர்களின் அன்புச் செல்வி சௌபாக்கியவதி ரவிச்சந்திராவுக்கும் 1—7—84 அன்று காஞ்சிபுரத்தில் மிகவும் சிறப்பாக திருமணம் நடைபெற்றது. மணவிழாவுக்கு பல ஆன்மீக அன்பர்களும் வந்திருந்து வாழ்த்திச் சென்றனர். புதுமண தம்பதிகளுக்கு குமாரப்பெருமான் திருவருளை வேண்டி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

—ஆசிரியர்.

- நீங்கள் சுயமரியாதை திருமணம் செய்து கொண்டவரா?—இது பெரியாரிடம் கேட்கப்பட்ட கேள்வி.

சுயமரியாதை இருந்தால் நான் ஏன் திருமணம் செய்து கொள்கிறேன்.—இது பெரியாரின் பதில்.

நாம் ஆண்டவனை ஏற்றுக்கொள்ளுகிறோமா என்பது பிரச்னை அல்ல. நம்மை ஆண்டவன் ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதியோடு நடந்துகொள்கிறோமா என்பதுதான் முக்கிய அம்சம். —கலைஞர் கருணாநிதி.

வாரியார் பேசுகிறார்.....

உன் உடம்பின் இரு பகுதிகளையும் காண வேண்டுமானால் நீ என்ன் செய்கிறாய் ?

இரு கண்ணாடிகட்கு நடுவே நிற்கின்றனையன்றோ? அதுபோல் பர ஞானம், அபரஞானம் என்ற இரு கண்ணாடிகளினால் இறைவனுடைய ஞான வடிவைக் காணலாம்.

ஃ ஃ ஃ

கோயிலில் புறக்கண்கொண்டு கண்ட இறைவனை உள்ளமாகிய கோயிலில் உள்ளக்கண்ணால் காண முயற்சி செய்; இறைவனுடைய சொரூபம் உனது உள்ளக் கமலத்தில் விளங்குவதாக. அந்தக் காட்சி தான் சிறந்த காட்சி, அக்காட்சியால் வரும் இன்பத்தை வேறு எதனா லும் பெறமுடியாது.

ஃ ஃ ஃ

விளக்குக்கு ஒரு நிறமில்லை. ஆனால் பல நிறமுடைய கண்ணாடி கூட்டுக்குள் அவ்விளக்கு எரிகின்றது பச்சை நிறமுடைய கண்ணாடியின் பக்கம்நின்றுபார்த்தால்பச்சையாகவும், சிவப்பு நிறமுடையகண்ணாடியின் பக்கம் நின்று பார்த்தால் சிவப்பாகவும், நீல நிறமுடைய கண்ணாடியின் பக்கம் நின்று பார்த்தால் நீலமாகவும் தோன்றும் நிறமில்லாத விளக்கு கண்ணாடியால நிறத்தைத் தாங்கியதுபோல் தோன்றும். அதுபோல் சாதகன் எந்தெந்த வடிவாக ஆண்டவனை வழிபடுகிறானோ இறைவன் அந்தந்த வடிவைத் தாங்கி அருள்புரிகின்றான்.

ஃ ஃ ஃ

இறைவனிடம் நீ நின்று அன்பு செய்யும்போது, "ஏ, ஆண்டவனே! உலகத்திலுள்ள எல்லா உயிர்களும் இன்புற அருள்புரிவீர்" என்று வேண்டு: அப்படியின்று 'என்னைக் காப்பாற்று' என்று மட்டும் வேண்டாதே. உலகத்திலுள்ள உயிர்களை எல்லாம் காப்பாற்று என்று வேண்டுவாயானால் அவ்வுயிர்களில நீயும் ஒருவன்தானே?

என் வயலுக்கு மழை பொழிய வேண்டும் என்று வேண்டுவதைவிட உலகமெல்லாம் மழைபொழிய வேண்டுமென்று வேண்ட வேண்டும். உலகமெங்கும் மழை பொழிந்தால் உன் வயலும் அதில் சேர்ந்துவிடு கின்றதன்றோ?

ஃ ஃ ஃ

கடவுளை வணங்கும்போது, 'இதைக் கொடு', 'அதைக் கொடு' என்று கேட்காதே. உனக்கு வேண்டிய யாவும் அவரே தருவார். உனக் குள்ள குறைகள் சொல்லாமலே தெரியும். கொடுப்பதிலும் உலோபகுண மில்லாதவர். எல்லாம் அவருடைமை. அவர் எல்லாமுணர்ந்தவர். கருணைக்கடல். யாவும் அருளவல்லார். ஆதலினால் இறைவனை அன் பினால் வணங்கு. அவரிடம் வியாபாரம் பண்ணாதே.

தொகுப்பு : G. வெங்கட்ராமன், B. G. ராமகிருஷ்ணன்
ராஜேஸ்வரி ஹால், சேலம், கோவை

கோபுர மார்க் பன்னீர்
சந்தனுதித் தைலம்
லவ் பேர்ட்ஸ் பத்தி
குல்கந்து
ஓமதி நீர்
பொன்னுங்கன்னித் தைலம்
பெண்டாஸ்டிக் பத்தி.
சந்தன பத்தி.
K·T·R
K.T.R. வாசனுதி திரவிய சாலை
திருவாரூர், 610001.. தமிழ்நாடு.

மயிலை கருணைமிகு காரணீஸ்வரர்

மயிலை பஜார் தெருவில் அமர்ந்து அருள்பாலித்துவரும் கருணைமிகு காரணீஸ்வரர் திருக்கோயிலுக்கு, அண்மையில் திருப்பணித் தொடக்க விழா அமைச்சர் திரு. இராம வீரப்பன் அவர்களால், மயிலை குருஜி சுந்தரராமன் அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்று திருப்பணி வேலைகள் மிகவும் வேகமாக செயல்பட்டு வருகிறது.

பல ஆன்மீக அன்பர்கள் பகவானுக்கு வேண்டி பல நற்பணிகளை தாமாகவே முன்வந்து தங்கள் காணிக்கையாக செய்து வருகிறார்கள்.

மூலவர் லிங்கத்திற்கு மயிலை ஸ்ரீமதி வஸந்தி பாலகிருஷ்ணன் என்பவர் சுமார் ருபாய் ஐயாயிரம் வரை செலவு செய்து நாகாபரணம் சமர்ப்பித்துள்ளார்கள்.

ஆன்மீக அன்பர் ஸ்ரீகாரணீஸ்வரர் பொற்கொடியின்பால் மிகவும் பக்தி உள்ளம் கொண்ட திரு. E S குமார சுவாமி என்பவர் சுமார் பத்தாயிரத்திற்கும் மேல் செலவு செய்து பிரதோஷ மூர்த்திக்கு ரிஷப வாகனம் செய்வித்து வெள்ளோட்ட விழாவை கைங்கர்யமாகவே செய்து வைத்துள்ளார். இப்புனிதக் காட்சியை டி, வி.யிலும் அன்பர்கள் கண்டு களித்துள்ளனர்.

அத்துடன் அன்பர் திரு. குமாரசாமி அவர்கள் ஸ்ரீ உண்ணுமலை சமேத அண்ணுமலையார் சன்னதிக்கு விமானம் முதலிய சகல திருப்

பணிக்கும் சுமார் ரூ 15 000 வரை செலவு செய்து வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன

பல இளைஞர்கள் இத்திருக்கோவில் திருப்பணியில் முக்கிய பங்கு கொண்டு பல நற்பணிகளை செய்து வருகின்றனர்

காசிமடாதிபதி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் அவர்கள் காசியிலிருந்து வெண்சாமரம் இரண்டு முழுவதும் தங்கள் காணிக்கையாக அனுப்பி வைத்துள்ளார்

பக்தி உள்ளம் கொண்ட பல ஆன்மீக அன்பர்கள் தங்கள் காணிக்கையாக பல திருப்பணிகளை மேற்கொண்டு செய்து தர வாய்ப்பும் உள்ளது

மூலவர் விமானம், அம்மன் சன்னதி விமானம், விநாயகர், முருகன் முதலிய சன்னதிகளின் திருப்பணி, காசி விஸ்வநாத பகவான் சன்னதிக்கு விமானம் முதலிய பல திருப்பணிகளை செய்து தரலாம்.

ஒரு ரூபாயானாலும் தங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பி வைத்து மனமகிழ்ச்சியும் அமைதியும் பெற்று ஈஸ்வரனின் அருளைப் பெறலாம். சிறுதுளி பெருவெள்ளமாகுமல்லவா?

குண்டுசியும் தன் காணிக்கையாக உலாவரும் மூர்த்திக்கு திருக்குடை ஒன்று சமாப்பித்துள்ளது

இப்புனித திருப்பணி வெகு விரைவில் நிறைவுபெற்று கும்பாபிஷேக விழாவும் விரைவில் நடைபெற தங்கள் சக்திக்கு உகந்தாற்போல் காணிக்கை அனுப்பி வைக்கும்படி திருப்பணிக் குழுவினர் வேண்டுகின்றனர்

—ஆசிரியர்

காணிக்கை அனுப்ப வேண்டிய விலாசம் ;

அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயில் திருப்பணி குழு

கடை வீதி, மயிலை, சென்னை 600 004

சிறந்த வைரம், பொன் ஆபரணங்களுக்கு நம்பிக்கையான இடம்

ராமு & கோ.

(ஜுவல்லர்ஸ்)

258, பெரிய கடைவீதி, கோயமுத்தூர்-641001

போன்—கடை : 23591, வீடு : 33591. தந்தி : ராமகிருபா

5

முதல் பதிலே முனிவர்களை வியப்பிலாழ்த்தியது. ஆஹா......அருமையான விளக்கம் என்றனர் இருவரும்.

ஸ்ரீமதி! என்னும் எழுத்தும் கண்ணெனத் தகும் என்றால் என்ன? பர்வதர் தம் புருவங்களைக் கேள்விக் குறியாக்கினார்; ஜடாமுடியும் தாடியும் உடன் குலுங்கியது.

வாசிப்பதும் கணிப்பதும்...நம் இரு கண்களுக்குச் சமமென்பது பொருள். இவை இரண்டும் இல்லாதவர் குருடருக்குச் சமம் இன்னும் சொல்வோமாயின் கலைமகளின் அருளும் அலைமகளின் செழிப்பும் நம் இரு கண்களென்றும் கூறலாம்.

ஓ...கோ...உயர்வான விளக்கம். உம்...இளவரசி...ஓரெழுத்து ஒரு மொழியென்றால்...?

நாரதர் மீண்டும் வினா எழுப்பினார்.

ஒரு பொருளை...ஒரே எழுத்தால் குறிப்பது. இளவரசியின் இதழ்கள் இசையோடு பதிலுரைத்தது.

விளக்க முடியுமா? பர்வதர் சற்று தயக்கத்தோடு கேட்டார்.

கா...என்றால் சோலை...ஆ என்றால் மாடு...நீ என்றால் நீங்களும் நானும்... தீ...நெருப்பு ... பூ...மலர் தா...தருக...வா...வருக !......போ என்றால் போகு...மா—பெரிய......கோ — மன்னன்...பா—பாட்டு......ஈ—மலப்பறவை! சீ—அலட்சியம்...தூ—என்றால்......

போதும்...போதும்...ஒரு சொல் ...பல பொருள் கூறுக...பார்ப்போம்...நாரதர் நெஞ்சை நிமிர்த்திக்கேட்டார்.

ஒரே சொல்லுக்கு...பல பொருள் பொருத்துவது இளவரசி இளநகையால் பதிலுரைத்தாள்.

உதாரணம் தேவையென்றார் பர்வதர்.

பார்...என்றால் நாம் வசிக்கும் இந்த பரந்த உலகம். பாரம் இழுக்கும் வண்டிக்குப் பயன்படும் முக்கிய பாகம...பார்...! நாம் ஒருவரை ஒருவர் நோக்குவதும் பார்தான்!

கார்—என்றால் நிலத்தை உழும் கலப்பையிலுள்ள இரும்பு கார்... என்பது கருமையும குறிக்கும். கார்...அபயம காப்பாற்று என்பதாகும்...போதுமா...இன்னும்...

தேன் சுவைக்கு ஒரு துளியும், பலாக் கனிக்கு ஒரு சுளையும்

ஆரணி பட்டு சுப்பிரமணியம்

திருமணம்,
பண்டிகை
மற்றும்
விசேஷங்களுக்கு
ராசியான
இடம்
ஸ்ரீ விஜேத்
சில்க்ஸ்
ராஜ வீதி.
கோயமுத்தூர்.
641001
சார்பு நிறுவனம்
விஜேத் கிளாத் சென்டர்
801, பெரிய கடை வீதி - கோவை
போன்: கடை 26131 - வீடு 30309
72. கிராஸ் கட் ரோட் - கோவை

போதுமோ...... முற்றும் சுவைத்தா முடிவைச் சொல்ல வேண்டும் சுவையோடு வரவேற்றார் நாரதர்.

கணிதமா என்றால்......? பர்வதர் பாதையை மாற்றினார்

கணிப்பு... எனக்கு எனப்படும் ஸ்ரீமதி கவனத்தோடு பதிலுரைத்தாள்.

அதற்கு நீ கூறும் விளக்கம்...

கூட்டல்... கழித்தல்... பெருக்கல் ...வகுத்தல்...

அதாவது...ஒரு எண்ணுடன் மற்றொரு எண்ணைக் கூட்டுவது கூட்டல். ஒரு எண்ணை இன்னொரு எண்ணால் மடங்காக்கிக் கூட்டுவது பெருக்கல். பெரிய எண்ணிலிருந்து சிறிய எண்ணைக் கழிப்பது கழித்தல். சிறிய எண்ணைக் கொண்டு பெரிய எண்ணை பகுப்பது வகுத்தல்.

ஏன் சிறிய எண்ணை பெரிய எண்ணால் வகுக்க முடியாதா?

தன் கானக் குரலில் கேட்டார் நாரதர்

முடியும் சுவாமி! ஆனால் அவை பின்னங்களாகி விடும். நறுக்காகப் பதிலுரைத்தாள் இளவரசி!

இதைக் கேட்ட முனிவர்களின் எண்ணங்களும் இதயமும் பின்னங்களாயிற்று அவள் போட்ட பதில் கணையினால்.

மன்னா...வாழ்க உன் புகழ்! நீ மும்மகளாகிய மலைமகள்... கலைமகள்... அலைமகளை ஒரு நிலையில் பெற்றுவிட்டாய் வாழ்க ஸ்ரீமதி! வளர்க அவள் கலை! நிறைக அவள் பக்தி!

இருவரும் உளமார வாழ்த்தினர்.

சுவாமி! ஒரு விளக்கம் கேட்கலாமா?

இளவரசி தம் நந்தியாப்பூ கண்களை நாற்புறமும் சுழலவிட்டுக் கேட்டாள்

மகளே... தவசிகளிடம் தர்க்கமா? கூடாதம்மா! அவர்களுக்கு...

அவர்களுக்குக் கோபம் வரும்... பிறகு சாபம் வரும்! அதனால் பல விபரீதம் வரும்...... இப்படித்தானே கூறப் போகிறீர்கள் தந்தையே......

பரவாயில்லை மன்னா! பிஞ்சு உள்ளத்தில் பயமென்ற தீயை மூட்டாதே. கற்கச் சற்றும் பயமில்லை என்பது தானே முதுமொழி! அறிவு வெள்ளத்திற்கு அணை போடலாமா? நீ கேளம்மா ஸ்ரீமதி! என்றார் நாரதர்

சுவாமி! ரிஷிகள் எத்தனை வகைப் படுவர்? விளக்கத்துடன் கூறுங்கள்.

பலே! கேட்க வேண்டிய கேள்வி. பார்த்தாயா மன்னா... உன் மகளுக்குத் தடை விதிக்காதே... அவள் குடத்து விளக்கல்ல. குன்றின் மேல் நிற்கும் விளக்கு. அறிவு ஒளி ஏராளம்... ஏராளம்...

ம்... ஸ்ரீமதி... ரிஷிகள் ஐவகைப் படுவர் ஒன்று தேவ ரிஷி அதாவது ...தேவர்களில் முற்றும் துறந்து சதா ஆண்டவனின் திருநாமத்தை உச்சரித்து உயர்வது. அது என்னையும் என் போன்றோரையும் குறிக்கும்.

இரண்டாவது அரசர்களில் முற்றும் துறந்து மோட்சத்தையடைய ஆண்டவனைத் துதிப்பது! அவர்களுக்குப் பெயர் ராஜரிஷி.

மூன்றாவதாக மகரிஷி... அதாவது பக்தியிலும் சக்தியிலும் முதன்மைப் பெற்று விளங்குபவர். தேவர்களோடு பேசும் சக்தியும் பெற்றவர்கள்!

நான்காவதாக...சக்திக்கும் பக்திக்கும் முற்றும் துறந்து முதிர்நிலைக்கும் மோட்சத்திற்கும் முயற்சிப்பவர்கள். அவர்கள் ரிஷிகள் என்றழைக்கப்படுவர். வரிசைப்படுத்திச் சொல்வோமாகில் தேவரிஷி...ராஜரிஷி...மகரிஷி...ரிஷி என்றாகும்.

மேலும் ஏதேனும் சந்தேகமிருந்தால் கேளம்மா என்று கம்பீரத்தோடு ஸ்ரீமதியை நோக்கினார் நாரதமாமுனி.

ரிஷிகள் ஐந்து என்றீர்கள். நான்கு பேர்களுக்குத்தானே விளக்கம் தந்தீர்கள்! இன்னுமொருவர்?

ஐந்தாவதாக...சப்த ரிஷிகள். தேவர்களுக்குச் சமமானவர்கள். சூரிய மண்டலத்திற்கும் மேலே வசிப்பவர்கள். என் தந்தை பிரம்மனுக்குப் படைக்கும் தொழிலில் உதவியாளர்களாகப் பணியாற்றுபவர்கள். அவர்கள் பெயர்கள்... அங்கீரஸ்... மரீசி... அத்ரி...புலஸ்த்யர்... க்ரது... புலஹர்... வசிஷ்டர் ஆகிய ஏழு பேர்களும் என் தந்தை பிரம்மதேவருக்கு மானசீக புதல்வர்கள். ம்... அடுத்து...

சுவாமி! ஒன்றாய் நின்றாய்! இரண்டாகி...மூன்றாகி... என்றீர்களே...... அதன் விளக்கத்தை நான் அறியலாமா?

ஆஹா...இதுவரை ஒன்றாய் இருந்தாய்...திருமணத்தால் இரண்டாகி, மகப்பேறு இரண்டு பெற்று, கணவனுக்கு மூன்று சொத்தாவீர் என்றேன்.

நான்கும் போற்றிக் காத்து... ஐந்து குறையாது என்றால்? மீண்டும் ஸ்ரீமதி வினவினாள்.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய நான்கையும் காத்து, ஐம்பொறிகளாகிய கண், காது, மூக்கு, வாய், மெய் ஆகிய ஐந்தும் குறையாது, தேயாது மறையாது வாழ்க என வாழ்த்தினேன்.

மகிழ்ச்சி சுவாமி! ஆறில் மகிழ்ந்து ...ஏழில் மயங்கியென்றால்...?

பஞ்சம் பட்டினியற்று அறுசுவை உண்டு, ஏழு, சுரங்களைப்போல் என்றென்றும் திகழ்க என்றேன்.

எட்டில் விரிந்து...ஒன்பதில் தவழ்ந்து...என்பதன் விளக்கம்...?

உன் புகழ் எட்டுத் திசைகளிலும் பரந்து விரிந்து, நவ என்றால் ஒன்

தன மூலிகை

வாசக நேயர்களின் சுபிட்சத்துக்காகவும், தரித்திரம், கஷ்டம், துன்பம், நோய், சத்துரு தொல்லையிலிருந்து விடுபட்டு, சர்வ சித்தி, தன சமர்த்தி, நினைத்த காரியத்தில் வெற்றி, அதிருஷ்ட தேவதையின் கிருபையை அடைந்து மேன்மை அடைய மகா அபூர்வ வன மூலிகைகளை சித்தர்கள் வழங்கி அருளாசி புரிகின்றார்.

விபரம் வேண்டுவோர் 60 காசு ஸ்டாம்புடன் தொடர்பு கொள்க, மகா நீல பானு மூலிகைக்கு ரூ. 25-00 மணியார்டரில் அனுப்பிப் பெறலாம். ஜோதிஷ சம்பந்தமான எல்லா விஷயங்களுக்கும் தொடர்பு கொள்ளவும்.

பிரபல ஜோதிஷர் காழியூர் ஜி. வாசு தேவாச்சார்யார்,
பிட்ரகுண்டா, P. O., P. C. 524 142 A. P.

பது, வகை ரத்தினங்களில் தவழ்க என்றேன்!

பதியைப் போற்றிப் பாவாய் வாழ்க...என்ருல்?

எல்லா நலன்களில் சிறந்தது. பதியாகிய கணவன் பக்திதான் பெரிது. அது இல்லாப் பெண்கள் வாழாவெட்டி...வழுக்கிவிழுந்தவள் என்று உலகத்தால் தூற்றப்படுவர். ஆகவே பதியோடு......அதாவது கணவனோடு பக்தியாய் வாழ்க என்றேன்.

என் சித்தம் குளிர்ந்தது! சினம் காப்பீர்! ஸ்ரீமதி நாரதர் காலில் விழுந்து ஆசி பெற்ருள். சுவாமி! பர்வத மாமுனி அவர்களே! தங்கள் வாழ்த்தின் விளக்கத்தை நான் அறியலாமா?

ஸ்ரீமதி! தேவரிஷி நாரதர் பதில் சொல்லும்போது நானும் விளக்கித்தானே ஆகவேண்டும். அருகாய் ...என்ருல் எக்காலத்திலும் ஈர முள்ள அருகம்புல் விநாயகர் துதிக்கும் உகந்தது ஆகவே...நீ எக்காலத்திலும் உயர்ந்து...ஈவு இரக்கத்துடன் பிறர் போற்றும்படி அருகாய் வாழ்க என்பது.

ஆலாய்...என்ருல் ஆலமரம் பல கிளையாய்... விழுதாய்......காய்கனியாய்—பல பறவைகள் தங்குமிடமாய் மக்களுக்கு நிழலாய் பயன்படுவது அது போன்று உன் வாழ்க்கை திகழ்க என்றேன்;

பால் எப்போதும் வெண்மையானது! சக்தி வாய்ந்தது. உள்ளம் கள்ளம் கபடமற்று சக்திபோல் வாழ்கயென குறிக்கும்.

வேலாய்...என்பது தேவர்களின் குறைகளைத் தீர்த்தது முருகவேல், அவ்வேல் போல் பிறர் துன்பங்களையும், இல்லத் துன்பங்களையும் களைத்து செறிந்து புகுந்த, பிறந்த இடங்களுக்குப் புகழ் தருக என்பதாகும்.

நூலாய்...என்பதின் விளக்கம் கூறுகிறேன். உடல் உலகில் அழிய கூடியது ஆனல் நம் முன்னேர்களும் இன்னேர்களும் இயற்றும் சுவடிகள் என்றும் அழியாதவை. அப்படி உன் புகழ் திகழ்க என்றேன்.

நாளாய் வளர்ந்து பாவாய் வாழ்க என்ருல்...இருபத்திநான்கு மணிகள் கொண்டது ஒருநாள். ஏழு நாட்கள் கொண்டது ஒரு வாரம். பல ஆண்டுகள் சேர்ந்தது ஒரு யுகம் ஆகவே நீ நாளாய் வளர்ந்து யுகமாய் வாழ்க என்றேன்,

பா—பாட்டைக் குறிக்கும். பாவாய் பெண்ணைக் குறிக்கும். பாவில் சிறந்த தமிழ் போலும் பெண்களில் சிறந்த தாய்போலும் வாழ்க என்றேன். போதுமா... இன்னும் –

சிறியோர் பிழையைப் பெரியோர் பொருத்தருள்வது நம் மரபு மன்னித்து வாழ்த்துங்கள் சுவாமி!

ஸ்ரீமதி வேண்டினுள். இன்னொரு விளக்கம் இருக்கிறது. அதை நான் விளக்குகிறேன். அது உன் தாதியரைப் பற்றியது பிரிக்கக் கூடாதது கன்றும் பசுவும் அப்படி நீங்கள் பிரியாமல் வாழ்க. பெண்கள் திருமணத்திற்குப் பின் பிரிவது வழக்கம். அப்படிப் பிரிந்தால் மாருத பாசமுடன் வாழ்க! நல்ல கணவனை அடைந்து செழித்து இன்பமாய் வாழ்க என்ருேம்.

அதனையே சுருக்கமாக கன்ருய்—பசுவாய்—பிரிந்தும் காதற் பெண்டாய் சென்றே செழித்தே வாழ்க என்ருேம். நாரதர் விளக்கம் தந்தார்.

சுவாமி! என் மகள் ஒன்றும் அறியாதவள். அறிவு விளக்கம் கேட்டாள். மன்னிப்பீர். மனம் பொறுப்பீர். மன்னர் கை கூப்பினர்.

மன்னு! ஈசனும் நக்கீரனும் தமிழுக்காக தர்க்க வாதம் செய்த பூமி இப் பூலோகம். இது அறிவுப் போட்டி. யாம் ஸ்ரீமதியின் கேள்விகளுக்கு மகிழ்ச்சியோடு பதிலளித்தோம். எங்களுக்குக் கோபமுமில்லை அவள் கேள்வி குற்றமுமில்லை. பொழுது சாய்கிறது. இனி பெண்கள் இருக்கக்கூடாது. நாளை காலை சந்திப்போம். போய் வாருங்கள்.

எல்லோரும் விடை பெற்றனர் முனிவர் தம் கண்களை மூடினார்.

—தொடரும்

கோவை நவரத்னு வீட்டுத் திருமணம்

சுமார் நாற்பது வருடங்களுக்கு மேலாக தங்கம் மற்றும் வைர நகை தொழிலில அனுபவமும், மககள நமபிக்கையும பெறறு நாணயமாக செயல் பட்டு வரும் நவரத்னு ஜுவலலரியின் ஸ்தாபகரும் அதிபரும், மூன்று மாமாங்கத்திற்கு மேலாக மிகவும் அன்புடன் பழகிவரும் எனது அருமை நண்பருமான திரு பி. குமாரசாமி செட்டியாா அவர்கள் தனது அன்புமகன சிரஞ்சீவி சாந்தமூர்த்தியின் திருமணத்தை கோவையில் 1-7-64 அன்று மிகவும் சிறப்பாக கோவை அகஸ்தியர் ஆஸரமம், ஸ்ரீலஸ்ரீ காட்டுசுவாமிகள அவர்கள் தலைமையில நடத்தி வைத்தார். மணமகள் திரு, வி. எஸ. துரைசாமி செட்டியாரின் செல்வமகள சௌபாக்கியவதி கீதா. திருமண விழாவிற்கு ஏராளமான உள்ளூர், வெளியூர் வியாபார பெருமககள வந்திருந்து வாழ்த்திச சென்றனா. சிர. சாந்தமூர்த்தி—சௌ கீதா புத்தம் புதிய தமபதிகளுககு குமாரப் பெருமான திருவருளை வேண்டி, எலலா நன்மைகளும் பெற்று நலவாழவு வாழ என் அன்பு ஆசிகளைக் கூறி வாழ்த்துகிறேன.

—ஆசிரியர்.

எமது மனங்கனிந்த சுதந்திர திருநாள் வாழ்த்துக்கள்

குருபூர்ணிமா

அமரர் ஸ்ரீசுவாமி சிவானந்தா

சம்பூரண வாழ்க்கையின் கலையை தன் சொல்லின் மூலமும், செயலின் மூலமும் மனித உலகத்திற்கு விளக்கிக் காட்டியிருக்கிறார் ஸ்ரீ வேத வியாசர். மகரிஷியுடன் குருபூர்ணிமா நெருங்கிய தொடர்புள்ளது. ஸ்ரீ வியாசர் ஆத்மீக புகழின் சிகரத்தை தன்னுள்ளே அடக்கியவராக இருக்கிறார்.

புனிதமாகிய குருபூர்ணிமா அன்று பிரம்ம சூத்திரங்களை அவர் எழுதத் தொடங்கினார். வியாஸரும் அவருடைய புகழ்பெற்ற நூலும் ஆத்மீக கலாச்சார உலகில் பெருமை மிக்க பூஷணமாக இருக்கிறது. குருக்களின் ஒப்பற்ற பிரதிநிதியாக ஸ்ரீ வியாஸர் விளங்குகிறார். குரு பூர்ணிமாவின் மற்றொரு பெயர் வியாஸ பூர்ணிமா ஆகும்.

குரு பூர்ணிமா என்பது குரு பூஜை அல்லது ஆத்மீக குருவை வணங்குதல் ஆகும். வணங்கப்பட்டவர்களின் குணங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணமின்றி வணங்குதல் என்பது முடியாத காரியமாகும். குருபூர்ணிமாவைக் கொண்டாடுவதற்கு வேண்டிய முதல் நிபந்தனை, எப் நல்லவனாக இருப்பேன், நன்மையே செய்வேன் என்ற உறுதிவேண்டும்.

குருவை அடைவதற்கு சரியாகத் தெரிந்துகொள்ளுதல், உலகப்பற்றின்மை, அமைதி புலன்களின் கட்டுப்பாடு, தாழ்ந்த ஆசைகள் இன்மை, குரு நமயிக்கை, எல்லாம் வல்ல இறைவனிடத்தில் பக்தி முதலியவை அவசியம் தேவை. குரு எந்த நற்குணங்களை உடையவராக இருந்தாரோ, அந்த நற்குணங்களோடு வாழ வேண்டும் என்று சிஷ்யர்கள் உண்மையாக விரும்ப வேண்டும்.

உள்ளம் பரிபூர்ணமாக புனிதமடைந்த பின் தான் தெய்வீக மனிதன் பல வழிகளிலும் போற்றப்படக்கூடும்.

குரு வணக்கத்தில் உயர்ந்த முறை அவருடைய போதனைகளின் படி நடப்பதும், அவர் காட்டியவழியில் வாழ்வதுமேயாகும் அறிவிலும் ஒழுக்கத்திலும் தன்னைப் போல இருக்கவேண்டுமென்று முயற்சி செய்கிறவனைவிட மற்றவரிடத்தில் குரு அதிகமாகத் திருப்தியடைகிறதில்லை குரு பூஜை என்பது உண்மையில் பகவத் பூஜையேயாகும் ஏனெனில் குரு தான் பார்க்கும் உருவத்தில் கடவுளாக இருக்கிறார்.

ஒரு தவசிரேஷ்டர் நாராயண மூர்த்தியாகவே இருக்கிறார்.

குருநாதர் உங்கள் அனைவருக்கும் சமத்துவம், நன்னடத்தை, தெய்வீக பக்தியுள்ள புதிய வாழ்வின் கதவைத் திறப்பார். உலகத்தை இறைவனின் எல்லையற்ற புகழின் இருப்பிடமாகக் கருதுங்கள்.

ஸ்ரீவசிஷ்டர், வியாஸர், சுகர், ஜனகர், சனகர், சனந்தனர், சநுதனர், சனத்குமாரர், தத்தாத்ரேயர் வாமதேவர் முதலியவர்களுக்கும் இன்னும் மற்ற பிரம்ம வித்தியா குருக்களுக்கும் அமைதியான வணக்கத்தைச் செலுத்துங்கள்.

அவர்களால் வகுக்கப்பட்ட வாழ்க்கையின் மாதிரியைப் பின்

பற்றி வாழ ஆரம்பியுங்கள். பிரம்ம சூத்திரங்கள், உபநிஷதங்கள், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற முக்கியமான சமயத் தமான ஆன்மீக நூல்களை வாசித்து அவை களிலிருந்து உணர்ச்சியைப் பெறுங்கள் உங்கள் குருவிடமிருந்து பெற்ற இஷ்ட மந்திரத்தை ஜபம் செய்யுங்கள்.

குரு உங்களுக்கு போதித்த வழியிலேயே கடவுளைத் தியானம் செய்யுங்கள் உங்களுடைய குருவினிடத்திலே இறைவனைக் காணுங்கள், மனிதனைப் பார்க்காதீர்கள் உங்கள் குருவின் உபதேசங்களைக் கடைப்பிடியுங்கள் உங்கள் வாழ்க்கையின் செயல்கள் அனைத்தும் இறைவன் பிரார்த்தனை வடிவமாக இருக்கட்டும்.

வேற்றுமை இல்லாத அன்பு உங்கள் குறிக்கோளாக இருக்கட்டும் பயனை எதிர்நோக்காத ஊழியம் உங்களின் சட்டமாக வேண்டும் உங்கள் கைகளைத் தர்மம் அலங்கரிக்கட்டும், இரக்கமும் தயையும் உங்கள் எண்ணங்களை அழகுபடுத்தட்டும் உங்களுடைய உள்ளத்தை சங்கீர்த்தனம், பக்தி, தியானம் முதலியவற்றால் புனிதப்படுத்துங்கள்.

உங்கள் மனச்சாட்சியை இறைவன் மீது ஒருங்குபடச் செலுத்துங்கள். அவருடைய மனச்சாட்சியிலே உங்களை ஐக்கியப்படுத்துங்கள், உங்கள் செல்வம் இங்கே இருக்கிறது சுதந்திரம் இங்கே உள்ளது. உங்கள் உன்னத மோக்ஷம் இங்கே உள்ளது

குருபூர்ணிமாவின் ஆசீர்வதிக்கப்பட்ட காலத்தை பிரார்த்தனை, வழிபாடு, தியானம் முதலியவற்றில் நீங்கள் கவனம் சலுத்துங்கள் இப்படி உங்கள் இன்பத்திற்கும் வீடுபேறுக்கும் வழியைத் தயார் செய்து கொள்ளுங்கள் பிரம்ம வித்யா குருக்களின் கடாக்ஷம் உங்களை வருக்கும் நிச்சயமேற்படும் நல்வாழ்வு பெற்று நற்கதி அடைவீர்.

நன்றி : தெய்வீக வாழ்க்கைச் சங்கம்
இராசிபுரம

நீங்கள 'கடவுள இல்லே'ன்னு சொல்லுங்கள். நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன ஆனால் கடவுளை நம்புகிறவனை முட்டாள்னு சொல்ல யாருக்கும் உரிமை கிடையாது —டைரக்டர் கே பாலசந்தர்.

எல்லாவிதமான தங்க நகைகள், வெள்ளி சாமான்கள் வாங்க நம்பிக்கையான இடம்

ஆனந்த் ஜுவல்லரி

99, பெரிய தெரு, திருவல்லிக்கேணி
சென்னை - 600 005
(வெல்லட் ஸ்கூல் சமீபம்)

27. சிநேகம்—சுயநலத் தியாகம்

கல்கத்தாவில் பிரசித்தி பெற்ற பள்ளியொன்றில் அனில், சுனில் என்ற இரண்டு நண்பர்கள் படித்து கொண்டிருந்தனர் இருவரும் நல்ல புத்திசாலி மாணவர்கள், அவர்கள் இருவரின் இணைபிரியா நட்பு, இருவரும் உடன் பிறந்தவர்களோ என்ற சந்தேகத்தை உண்டாக்கி விடும். ஒவ்வோர் ஆண்டு இறுதி தேர்வில் சுனில் முதல் தேர்விலும், அனில் இரண்டாவதாகவும தேறி வந்தனர். இது பல ஆண்டுகளாக தொடர்ந்து கொண்டேயிருந்தது.

அனிலுக்கு தாயும் தந்தையும் உள்ளனர். சுனிலுக்கு தாயார் மட்டுமே இருந்தார், தாயைத் தவிர சொந்தபந்தம் யாரும் எதுவும் கிடையாது.

சுனிலின் தாயார் திடீரென்று கடுமையான காய்ச்சல் கண்டு உடல்நலக் குறைவேற்பட்டது. சொந்தமென்று சொல்லிக்கொள்ள யாரும் இல்லாததினால சுனில்தான் தன் தாயாரை இரவென்றும பகலென்றும் பாராது சேவை செய்து வந்தான்.

ஒரு நாள் அவள் தன் உயிருக்கு மேலான தன் மகனை பகவான் காப்பாற்றி நல்லவனாக வளர்த்து வாழ வைக்கவேண்டுமென, மனதார பிரார்த்தித்துக் கொண்டே அவர் திருவடியை அடைந்துவிட்விட்டாள்.

சுனிலுக்கு தன் தாயாரின் மறைவு, அவனுக்கு ஓர் அதிர்ச்சியையும், தீராத வேதனையும் உண்டாக்கிற்று அவன் தன் உள்ளத்தில் மாற்றவே முடியாத ஒரு கவலையையும் உருவாக்கிவிட்டது.

தாயாரின் உடல்நலக் குறைவினால் சுமார் இரண்டு மாத காலம் பள்ளிக்குச் செல்ல இயலவில்லை. அவனுடைய ஞாபக சக்தியை நிலைநிறுத்திக்கொள்ள இரவு - பகல் பாராது சளைக்காமல் படித்துவந்தான்.

இரண்டு மாத காலம் பள்ளித் தொடர்பு விட்டுப் போயிருந்ததால் முதலிடம் பெற்றுவந்த சுனில் இரண்டாவதிடத்தையும், காலம் காலமாக இரண்டாவதிடம் பெற்று வந்த அனில் பெற்றுவிடுவான் என்று உபாத்தியாயர்களும், சக

மாணவர்களும், சுனில் உள்பட அவ்விதமே எண்ணினர்.

தேர்வுகள் நடந்து முடிந்தன. கேள்வித்தாள் மிக மிக சுலபமாக இருந்தும்கூட ஒருசில கேள்விகளுக்கு விடைகள் எழுதப் படாமலேயிருந்தன ஆனில் எழுதியிருப்பதைப்பார்த்தவுடன் உபாத்தியாயருக்கே சந்தேகமாயிருந்தது.

உபாத்தியாயர் உடனே அனிலை தன் வீட்டிற்கு கூப்பிட்டனுப்பி கேள்விகள் சுலபமாக இருந்தும் விடை எழுதாமல் விட்டதன் காரணம்தான் என்ன? என்று விசாரித்தார்.

அனில் உபாத்தியாயர் கேட்ட கேள்விகளுக்கு பதிலளிக்காமல் மௌனம் சாதித்தான். ஆசிரியர் மறுபடியும் கேட்டபோது என்ன சமாதானம் சொல்வதென்று ஆலோசித்தான். பொய்யொன்றை புனைந்து கூறவும் மனம் இடந்தரவில்லை உண்மையைக் கூறிவிடுவதென்று முடிவெடுத்தான்.

ஐயா, சுனில் ஒவ்வோராண்டும் முதல் ராங்க் வாங்கி வருவதும் உங்களுக்கும் மற்றும் பலருக்கும் தெரியும். இன்றைய சூழ்நிலை— சுனிலுக்கு எதிர்மாறாக உள்ளது. அவனிடம் அன்பாயிருந்த தாயார் காலமானது, தாயாரின் உடல்நலக் குறைவால் சுமார் இரண்டு மாதக் காலம பள்ளிக்கு வராமலிருந்தது, உலகில் அவனுக்கென்று இருந்த அவன் தாயாரைப் பிரிந்து திக்கற்றவனாகிவிட்டான். இந்நிலையில் தேர்விலும் தான் இரண்டாவது ராங்க்'கில் வந்தால் மனமுடைந்து சிலபல ஆபத்துக்களை முன் கூட்டியே தெரிந்துதான் இந்தத் தேர்வில் சரியாக எழுதவில்லை என்றான்.



ஆகா! ஸினித்தில் தைக்கும் பொழுது ஏற்படும் ஆனந்தமே தனி.

இல்லத்தரசிகள் தன் பொழுதை இன்பத்துடன் கழிக்க ஸினித் தையல் மிஷின் உங்கள் வீட்டில் இருக்கட்டுமே!

இதன் தரமும் அஸெம்பிள் செய்துள்ள முறையும் எல்லா தையல் மிஷின்களைவிட தனித்து முன்நிற்கிறது

பிஎம் எஸ்ஸி ஸினித் சுவிங் மெஷின் ஒர்க்ஸ்

653, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு,
சென்னை–600 006 போன். 82559

ஒவ்வொரு வீட்டிற்கும் ஸினித் கட்டாயம் தேவை

மேலும் அவன் முதல் ராங்கில் வந்தால் அந்த ஆனந்தமே அவனுடைய துயரங்களை மாற்றிவிடும் என்ற என்னுடைய நம்பிக்கை. இந்த சமாசாரம் உங்களையும் என்னையும் தவிர வேறு யாரிடமும் சொல்லவே கூடாது என்று பிரார்த்தித்தான்.

இவ்விஷயம் சுனிலுக்குத் தெரிந்தால் நிரமபவு ம வருத்தப்படுவான் அவன் என் உயிர் சிநேகிதன். அவன் எப்போதும சந்தோஷமாய் இருப்பதே எனக்கு ஆனந்தம் எனக்கு முதல் ராங்க் வராமலே போய் விட்டாலும் பரவாயில்லை என்றான்.

உபாத்யாயர் அனிலின் வார்த்தைகளைக் கேட்டதும் மறுபடி வாய் பேசுவதற்கே வழி இல்லாது, அவனது முதுகில் தட்டிக்கொடுத்து விட்டு, அப்பா, உனனைப் போன்ற மாணுக்கன் எனக்கு இருப்பதைப் பார்த்து பெருமையடைகிறேன். உன்னுடைய சிநேக நோக்கம்— பற்றின்மை, அன்பு, ஆர்வம், பச்சாதாபம் மிக அதிகமானது இந்த விதமான உதார குணங்களால் உண்மையில் நீ மேன்மையானவன். உன்னைப் பெற்ற தாய் தந்தையர் எங்களுக்கும் இந்தப் பள்ளிக்கும் கீர்த்தியைப் பெற்று கொடுத்துவிட்டாக என ஆசி கூறினர்.

இந்தக் கதையின் மூலம்

1 உண்மை சிநேக பாசம், தன் சுயநலத்தையும் விட்டு, தன் நண்பனின் மனக்கவலையையும் தீர்க்கச் செய்கிறதும்,

2. உபாத்யாயரிடம் தன் ரகசியத்தை யாரிடமும கூற வேண்டாம் என்ற கூறியதின் நோக்கம் தான் என்ற அகங்காரமின்மையை சுட்டிக் காட்டுகிறது.

3. இநதக் கதையைப் படிக்கும் குழந்தை தெய்வங்களே, இனி உங்கள் சுய அனுபவத்தின் மூலம் யார் உண்மையான சிநேகிதன் என்பதை அவரவர்களின் பகுத்தறிவினல் அறிய வேண்டும்.

4. எப்போதாயினும் சிநேகிதனுக்காகவோ, சகோதர, சகோதரிகளுக்கோ, மற்றும் சிரமப்படுகிறவர்களுக்காகவும எப்போதும் தியாக எண்ணத்துடன் கூடியவர்களாக இருக்கவேண்டும்.

தொகுப்பு: R பாலபட்டாபி,
உடுமலைபபேட்டை.

குடும்பத்திற்கு தேவையான எலலாவித எவர்சில்வர், பித்தளைப பாத்திரஙகள பிரஸ்டீஜ குக்கர், முதலிய சாமானகள யாவும நமபிக்கையான விலையில எஙகளிடம கிடைககும

மாதாந்திர சேமிப்பு திட்டத்தில் சேர்ந்து பயனடையுங்கள்

எஸ். ராமசாமி நாடார் & பிரதர்

49, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

காட்சி சாலைகள்:

22, பைக்ராப்ட்ஸ் சாலை, சென்னை-5.

5, ராமகிருஷ்ண மடம் சாலை, (லஸ்) சென்னை-4

தொழிற்சாலை:

38, V. R. பிள்ளை தெரு, சென்னை-5.

ஆன்மீக சிந்தனை

— டி. வி வைத்தியநாதன —

நாம் வாழும் உலகம் உருண்டை வடிவம் தினசரி ஒருமுறை ஒரு சுற்று சுற்றிக்கொண்டே அலுப்பு சலிப்பில்லாமல் இயங்குகிறது இந்த விந்தை யாரால்?

இதனால் சூரியோதயம் ஒவ்வொரு தேசத்திற்கும் மாறுபடுகிறது. நமக்கு பகல் நேரம், இன்னொரு நாட்டிற்கு இரவு மணிக்கணக்கும் இந்த அடிப்படையில் உலகெங்கும் மாறுதல்.

நாடுகளைவிட இந்த உலகத்தில் எத்தனை நதிகள், காடுகள், பாலைவனங்கள், மலைகள் முதலியன.

ஒரு நாள் சுற்றும் வேகம் பயங்கரம். இதில் எவ்வளவு கடல்கள், மகாசமுத்திரங்கள்.

வானவெளியில் ஒரு பகுதியில் நாம் வசிக்கும் பூமி ஈர்ப்புச் சக்தியால் ஒரு நிலையில அந்தரங்கமாக தொங்குகிறது சூரிய ஒளி உதயம், அஸ்தமனம், வெப்பம பகுதிக்குப் பகுதி மாறுபடுகின்றது.

இதன் படுவேக சுற்றலால் நாம், நம்மை சுற்றியிருக்கும் மற்றவை தடுமாறுவதில்லை ஆற்று நீரோ, கடல் நீரோ வழிந்து வானவெளியில் கொட்டுவதில்லை. மேகங்கள் ஆகாயம் முழுவதும் வியாபிக்கும் பொழுது மழை, புயல் வெள்ளம் பருவமழை காலம் கணிக்கப்படுகிறது இதுவும் கட்டுபாடில்லாமல் மழை இல்லாமை, அதிக மழை, வெள்ளம் பெருகி நாசங்கள்.

பூகம்பம் எரிமலையால் சில இடங்களில் பூமி நடுக்கம் அல்லது பெருத்த சேதம் நீள, அகல விஸ்தீரணங்களுக்கு தகுந்தபடி சீதோஷ்ண மாறுபாடுகள் தெற்கு வடக்கு உச்சிகளில் பனிக்கட்டுப் பாறைப் பிரதேசா. கடும் வெய்யிலில் சில மலைப் பிரதேசங்களில் இதமான குளிர் மழைக் காலங்களில் விரைத்துப் போகுமளவிற்கு தாங்க முடியாத குளிர் சூரியன் ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வடக்கு, தெற்கு என்று ஒளிப பிரகாசம் உத்தராயணம், தட்சிணாயணம் என்பவை சூரிய ஒளியால் சந்திர ஒளி தேய்ந்தும், வளர்ந்தும். அமாவாசை இருட்டு. பௌர்ணமி பகல்

ஈர்ப்பு சக்தியால் உலகம் தினசரி படுவேகமாகச் சுற்றுவதால் எதையும் பாதிப்பதில்லை அக்கு திசையை பரிமணித்து உலகம், நம் பூமி. கட்டுக்கு அடங்கி யுகயுகமாய் இயங்கிகொண்டே போகிறது இது யாரால்?

நிலமானது கடலாகவும், கடல் நிலமாகவும் மாறியது ஆழ்கடல் ஆராய்ச்சி ஆதாரம். விஞ்ஞான கணிப்பு. கடலில் இன்னும் பலமலைகள்.

வான வெளியிலுள்ள நட்சத்திரங்களை எண்ண முடியுமா? சூரிய சந்திர பிரகாசத்தை நாம் எப்படி உணர்கிறோம். இவைகள் யாரால் இயக்கப்படுகிறது.

விஞ்ஞான வளர்ச்சியில் வான வெளி பரிசோதனைகள். பூமிக்கு மேல் கணக்கிடப்பட்ட சாரத்தில் கண பருவே இல்லையென்ற தீர்ப்பு, வானவெளி பாதை நவட விஞ்ஞதம் பிராண வாயு மனிதனுக்கு பூமியிலிருந்து செயற்கையாகக் கிட்டுகிறது.

இப்படிப்பட்ட விஞ்ஞான வளர்ச்சிச் சாதனை செலவு, நாட்டுக்கு நாடு கோடானு கோடி அளவில்.

ஜீவராசிகள் மற்ற மண்டலங்களில் உள்ளனவா? என்று தீர்மானமாக ஆராய முடியவில்லை சந்திர மண்டலத்திலிருந்து கொண்டுவரப்பட்ட மண்ணும் கல்லும் ஒரு விபரமும் ஆராய்ச்சியில் திட்டமிட்டு மற்ற மண்டல அமைப்பை கூற இயலவில்லை தூரதிருஷ்டி சாதனங்கள் விஞ்ஞான அளவு தீர்ப்பு ஆதாரம் என்று சொல்ல முடியவில்லை.

செயற்கை கோள்கள் ராக்கெட் மூலம் வானவெளியில் தரைக்கட்டுபாடு விஞ்ஞான வளர்ச்சியால், செய்தி சாதனங்களுக்கு மிக உதவி என்று ஆராய்ச்சி. தூரதர்ஸன் பயனுக.

பூமியை வலம் வரும் விஞ்ஞானிகள் புகைப்படங்கள் எந்த அளவில் பயனுகப் போகிறதென்று புரியவில்லை.

உலகெங்கும் பஞ்சம், பசி, ஜனத்தொகை தேவைககு உற்பத்தி, கட்டுப்பாடில்லாத விலைவாசி, விஞ்ஞானத்தால் சாதாரண மனித இனம் எந்த நிம்மதியும் பெறவில்லை.

பெரிய அபிவிருத்தி போர்க்கருவிகள், குவிப்புப் போட்டி. உலகெங்கும் நிதர்ஸனம்.

நாம் இயற்கையுடன் விளையாடுகிறோம் ஒவ்வொரு நாடும் போர் நேரிட்டால் அதை சமாளிக்க வருடா வருடம் ஆயுதங்கள் தயாரிக்கின்றனர். பெரிய அளவில் ஒவ்வொரு நாடும் பணத்தை இந்த உற்பத்திக்கு செலவு செய்கின்றனர். இதனால் மக்கள் அல்லல்படுகின்றனர். நாடும் வருடா வருடம் அந்நிய நாட்டு கடன் உயர்வுக்கு உள்ளாகி தத்தளிக்கின்றது.

ஏவுகணை என்ற போர்க்கருவி நேரிடை போரைத் தவிர்த்துவிட்டது. இந்த யுத்த பலம் நவீன விஞ்ஞானிகளின் திறனில் அணுகுண்டை விட சக்திவாய்ந்த இந்த ஏவுகணைகள் லகுவாக்கிவிட்டது.

ஒவ்வொரு நாட்டிலிருந்தே தன் விரோத நாடுகளின் எந்தப் பகுதியையும் இந்த சக்தி வாய்ந்த ஆயுதம் பிரமாண்ட அழிவைச் சாதிக்கும்.

நம் பல புராண இதிகாச வரலாறுகளில் பலவித அஸ்திரங்களை கலதயென்று படித்தோம் அவைகள் நவீன பெயரில் உலாவுவதைக் கண்கூடாக அறிகிறோம் நம் ரிஷிகள்தான் இந்த யுக விஞ்ஞானிகள்.

பாரதநாடு தர்மயுத்தம் அதர்மத்தை அழிக்க அக்காலத்தில் ஈடுபட்டது சாதுக்களைக் காப்பாற்றவும், கயவர்களை தண்டிக்கவும் பரம்பொருள் அவதாரம்.

இது கட்டுக்கதை என்ற ஏளனம் கலிகால யுகத்தில் பொய்த்து வருகிறது.

உங்கள் மனம் விரும்பும் தெய்வத்தனிடம் ஒவ்வொருவரும் சரணுகதி அடையுங்கள். பிறப்பு சுரீமம். இறப்பு மர்மம்.

கடவுள்தான் காப்பாற்றவேண்டுமென்று கவலையில் கதறாமல், கடவுளே என்றும் எல்லாம் உன் செயல் என்று பரம்பொருளை சரணுகதி அடையுங்கள்.

தூய்மை வளர பரோபகார அடிப்படையில் சத்திய சன்மார்க்கத்தைக் கடைபிடியுங்கள். பல ஜன்மாந்திர பாவங்கள் விலக ஆறறிவுகொண்ட மனித பிறவி தொண்டராகி, நற் கர்மாக்கள் வரை நல்வாழ்வு கிட்டும்.

பக்த விஜய பாராயணம் பண்ணி படியுங்கள் ஓங்கி உலகளந்த உத்தமன் புகழ்பாடுங்கள்.

கௌரி

தேன்கூடு
சிறு சேமிப்பு திட்டம்

இத்திட்டத்தில் எல்லோரும் சேரலாம். ரூ. 25, 50 என்று மாதாமாதம் சேமிப்பதன் மூலம் சிறந்த நகைகளைப் பெறலாம் ஒருவர் எத்தனை சீட்டுக்கள் வேண்டுமென்றாலும் சேரலாம்.

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நாணயத்திற்கும், நம்பிக்கைக்கும் பெயர் பெற்றவாகள் :

கௌரி ஜுவல்லரி மார்ட்

72-85, பைகிராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி,
சென்னை - 600005.

உரிமையாளர் : K. ராமலிங்கம்   போன் : 842594

பழநியம்பதியில் கலியுக வரதனாக
அவதரித்த
ஸ்ரீபழநி ஆண்டவரை தரிசிக்கும்
பக்தகோடிகள் அனைவரும்
விரும்புவது

பழநி
S. சித்தனுதன்

ஸ்பெஷல் ஜவ்வாது
வாசனை விபூதி
ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

○

பரிமள விலாஸ்

S. சித்தனுதன் சன்ஸ், விபூதி ஸ்டோர்,
அடிவாரம், பழநி-624601.

போன் : கடை 405   விபூதி ஸ்டோர் : 406

நவக்ரஹ சாந்திகள்

ஸ்ரீ. குருவாயூரப்பதாசன் B. சுந்தரராமன், M.A.,B.Ed.

5. குரு பகவான்

(வியாழன்)

பிரம்ம தேவனுடைய மானஸ புத்திரர்களில் ஒருவராகிய ஆங்கீரஸ முனிவர்க்கும் சிரத்தா தேவிக்கும் புதல்வர் குரு என்னும் வியாழ பகவான்.

இவர் மனைவி தாரை, சகோதரன் உதத்தியர், சகோதரி யோகசித்தி, குருவுக்கும் மமதா தேவிக்கும் தோன்றியவர் பரத்வராஜ முனிவர்.

குரு பகவான் பொன்னிறம் உடையவர். நான்கு திருக்கரங்கள் உடையவர். ஜபம் செய்யப் பயன் படும் அக்ஷமாலை, யோகதண்டம், கமண்டலம், அபயம் ஆகியவைகளை இக்கிரகம் ஏற்றிருக்கும். குருவை இருகரமுடையவர் என்றும், புத்தகமும் அட்ச மாலையும் வைத்திருப்பார் என்று விஷ்ணு தர்மோத்தர புராணம் கூறும்.

இவர் கரத்தில் இந்திரனுக்கு உரியது போன்று வஜ்ராயுதம் உண்டென்றும், பரா பைசந்தி, மத்யமா, வைகரி என்ற நால்வகை வாக்குகளின் தலைவர் என்று முத்துஸ்வாமி திக்ஷிதரின் நவகிரக கீர்த்தனை கூறுகிறது. இவ்விதமே தம்மை வழிபடுபவர்களுக்கு இனிமையான வாக்கை அளிப்பாரதலின் வாகீசர் என்ற திருநாமமும் உண்டு.

நான்கு சக்கரங்கள் கொண்ட ரதத்தில் நாற்கோணமான பீடத்தில் குருபகவான் எழுந்தருளுவார். இவருக்கு அன்ன வாகனமென்றும் நவக்கிரக ஆராதனம் என்ற நூல் கூறுகிறது.

குரு பகவான் பொன்னிற மேனியர், பொன்னிறச் சந்தனம் பூசுபவர், பொன்னிற மலர், பொன் மாலை, பொன்குடை, பொற்குடை, பொற்கொடி கொண்டு பொற்றேர் ஏறி மேருவை வலம் வருகிறார். குருவின் அதிதேவதை பிரம்மன், ப்ரத்யதி தேவதை இந்திரன்.

குருவிற்குரிய தானியம் கடலை, மணி, புஷ்பராகம், மலர் முல்லை, ஸமித்து அரசமரக் குச்சி, சுவை இனிப்பு, திசை ஈசான்யம் அல்லது கிழக்கு ஆகும். குரு பகவான் தம்மை வழிபட்டோர்க்கு திருமணப் பேற்றையும், சத்புத்திரப் பேற்றையும் தாமதமின்றி அளிப்பதில் வல்லவர்.

குரு பகவானுக்குரிய க்ஷேத்ரம் திருச்செந்தூர். இங்குள்ள முருகப்

பெருமான் சூரபதுமனைக் கொன்று வெற்றிக்கொடி நாட்டிய பின்னர் திருமுருகனின் அருட்செயல்களான வீரகாவியமாம் கந்தபுராணத்தை முருகன் சவிமடுப்ப குரு பகவான் இசைத்தார் எனவே திருச்செந்தூர் முருகனை வழிபடுவோரை பற்றியிருந்த தோஷங்களை குரு பகவான் களைவார்.

ஆலமரச் செல்வனான தட்சிணாமூர்த்தி எனும் மௌன குருவின் வழிபாடும் வியாழனுக்குத் திருப்தியளிக்கும். குரு சம்பந்தமான தோஷம் உள்ளவர்கள் பிரதி வியாழன் மாலை தட்சிணாமூர்த்திக்கு அபிஷேகம், அர்ச்சனை செய்து தயிரன்னத்தையும் நிவேதனம் செய்து ஆண் குழந்தைகட்கு அந்த அருட்பிரசாதத்தை விநியோகித்து எஞ்சியதை அருந்த தோஷங்கள் சூரியனைக் கண்ட பனிபோல் விலகி புத்திரப்பேற்றையும் மெய்யடியார்கள் அடைவர்.

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் நீடாமங்கலம் பெருஞ்சாலையிலுள்ள ஆலங்குடித் தலம் குருபகவானால் பூசிக்கப் பெற்றது. இங்குள்ள தட்சிணாமூர்த்தியை வழிபடவும் மிகுந்த நன்மைகளுண்டு. தசாவதாரங்களில் வாமன மூர்த்தியை துதிக்க குருபகவான் ப்ரீதியடைவார். குருவிற்குரிய காயத்ரி,

ஓம் விருஷபத்வஜாய
வித்மஹே, க்ருணி
ஹஸ்தாய தீமஹி தன்னோ
குரு ப்ரசோதயாத்

என்பதாகும். குருவிற்குரிய வேத மந்த்ரம்.

ஓம் ப்ருஹஸ்பதே அதியிதர்யோ அர்ஹாத்யுமத்விபாதி க்ரது மஜ்ஜனேஷு | யத்தீ தயச்சவஸருத ப்ரஜ த ததஸ்மா ஸுதரவிணம் தேஹிசித்ரம | என்பதாகும. இதற்குரிய ரிஷி க்ருத்ஸமர். தேவதை

எமது மனங்கனிந்த சுதந்திர திருநாள் வாழ்த்துகள்

ப்ருகஸ்பதி, சந்தஸ் த்ரிஷ்டுப் என்பதாகும்.

குருவுக்கு அரச இலையில் செவ்வரிசிச் சோற்றை வடகிழக்குத் திசையில் கிரகபலியாக தர ப்ரீதி அடைவார். ரிக் வேதத்தின் தலைவர் குரு பகவான். ஹேமந்தருதுவிற்கும் குருவே தலைமை பூண்டவர்.

த்வாரகையின் அழிவுக்குப் பின் கிருஷ்ணனால் கொடுக்கப்பட்ட கிருஷ்ண விக்கிரகம் குரு பகவானால் வாயுவின் துணைகொண்டு ப்ரதிஷ்டை செய்யப்பட்ட க்ஷேத்திரம் குருவாயூர் எனவே குருவாயூரப்பனை வணங்கினால் குருபகவான் ஸந்தோஷமடைந்து பக்தர்கட்கு அருள்புரிவார்.

பண்டைய கிரேக்கர்கள் குரு பகவானை ஜீயஸ் என்றும், எகிப்தியர்கள் அமான் என்றும், நார்ஸ் இனத்தினர் தார் என்றும், பாபிலோனியர்களும், சால்டியர்களும் மெரோடாக் என்று குறிப்பிட்டனர்.

குருவை செய்கின்றகருமங்களின் தலைவராகவும் நீதிக்குரியவராகவும் வெளிநாட்டினர்கருதினர். அறிவின் அடையாளச் சின்னமாகப் போற்றினர்.

கு காரம் என்பது அஞ்ஞானம் ரு காரம் அதனை நீக்கும் ஒளி. எனவே அஞ்ஞானமாகிய இருட்டையழிக்கும் ஒளியாகியவர் குரு பகவான். நம் மதாசாரியர்களின் திருவருள் இருந்தால் குருவருள் உண்டு. எனவே நடமாடும் தெய்வமாகிய அவரவர்களின் ஆசாரியர்களின் திருத்தாளினைப் பற்றுவோமாக.

மல்லிராஜூ — நாககுமார் திருமணம்

வேதாரண்யம் பிரபல ஸ்வஸ்திக் புகையிலை தொழிற்சாலை ஸ்தாபகரும் அதிபருமான எனது அருமை நண்பர் A. G. அனந்தராஜய்யன் அவர்களின் மருமகன் எனது அருமை நண்பர் திரு. J. சக்கரவர்த்தி அவர்களின் அன்புச் செல்வி சௌபாக்யவதி மலலிராஜுவுக்கும், சென்னை திரு. V. C. ஸ்ரீதரன அவர்களின் அனபுச் செல்வன் சிரஞ்சீவி பாபு என்கிற நாககுமாருக்கும் 17-6-84 அன்று வேதாரண்யத்தில் மிகவும் சிறப்பான முறையில் திருமணம் நடைபெற்றது. மணவிழாவிற்கு ஏராளமான உள்ளூர், வெளியூர் அன்பர்களும் வியாபார பிரமுகர்களும் விஜயம் செய்து தம்பதிகளை வாழ்த்திச சென்றனர், புதுமண தம்பதிகளுக்கு முருகப்பெருமான் அருளை வேண்டி நலலாசி கூறி வாழ்த்துகிறேன்.

—ஆசிரியர்.

எனது வீரக் குழந்தைகளே, நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் எனபதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய் குட்டிகளின் குரைப்பைக் கேட்டு அஞ்ச வேண்டாம். எழுந்து நின்று வேலை செய்யுங்கள்.

மதத்தை நன்கு புரிநதுகொண்டுள்ள நாடு உலகிலேயே ஒரே ஒரு நாடு இந்தியாதான என்ற முடிவுககு நான் வந்திருக்கிறேன். ஹிந்துக்களிடம் குற்றம் குறைகள் பல இருபபினும் அறநெறியிலும், ஆனமீக நெறியிலும் அவாகளை மிஞ்சியவர்கள் உலகில வேறு எவரும் இல்லை.

—விவேகானந்தர்.

எல்லோருக்கும் எமது சுதந்திர தின நல் வாழ்த்துக்கள்

தங்க மெடல் பரிசு பெற்றது! காரம். மணம் கமழும்

பி. வி. ராஜன் அண் கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

ஆர். எஸ். சுகந்த மூக்குத்தூள்

உபயோகியுங்கள்

அரக்கோணம் — மதருஸ்

ஸ்தாபிதம் : 1920

மற்ற பொடி தினுசுகளுக்கும், விபரங்களுக்கும் எழுதவும

எமது மனங்கனிந்த சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்

●

உயர்ந்த பட்டுப் புடவைகள்

டெரீன், உல்லி, நைலாக்ஸ், புல்வாயில் சேலைகள் பல ரகம்

சூட்டிங், ஷர்ட்டிங் பல ரகங்கள்

நாகரீகத்தின் பிரதிபலிப்பு

எல்லாவிதமான ஜவுளிகளும் ஏராளமாக வந்துள்ளன,

●

பி. ஆர். நாராயணசாமி அய்யர்

494, பெரிய கடை வீதி, திருச்சி-8

போன் : கடை - 24026 வீடு - 24641 தந்தி : BONTEX

மகாகவி காளிதாசர் அருளிய

மகாகவி காளிதாஸர் அருளிய குமார சம்பவம் என்னும் முருகன் அவதார மகிமையைப்பற்றி ஆன்மீக எழுத்தாளர் ஸ்ரீ சுந்தரராமன் அவர்கள் எழுதி வரும் இப் புனிதக் கட்டுரை இவ்விதழுடன் நிறைவு பெறுகிறது. பல நேயர்கள் பாராட்டி எழுதியுள்ளார்கள். எனது அன்பு நேயர்கள் சார்பாக திரு. சுந்தரராமன் அவர்களுக்கு நன்றி செலுத்தி நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்.

—ஆசிரியர்.

11

சிவபெருமான் சிம்மத்தையொத்த நடையுடன் ஹிமவானது மாளிகைக்குள் நுழைந்ததும் பேரிகை, படகம், துந்துபி முதலிய வாத்ய கோஷங்கள் அதிர்ந்தன. இறைவன் மீது பொரி, புஷ்பம் முதலியவற்றை ஸ்திரீகள் தூவி வரவேற்றனர். பாத பூஜை செய்து ஆரத்தி எடுத்தனர்.

முன்னால் பிரம்மதேவர் செல்ல அருகில் விஷ்ணுவும் ஸப்த ரிஷிகளும் வர, பின்னால் தேவர்குழாமும் சிவ கணங்களும் இறைவனைத் தொடர்ந்தனர்.

ஹிமவான் சிவபெருமானை ரத்ன மிழைத்த தங்க சிம்மாசனத்தில் இருத்தி அர்க்யம் ஆசமனீயம், மதுபர்க்கம் முதலியவைகளால் நன்கு உபசரித்தான். பிறகு திவ்யமான பட்டு வஸ்திரங்களை மந்த்ரோக்தமாக அளித்தான். இறைவனும் அன்புடன் அதை அங்கீகரித்தார். பிறகு அவற்றை அணிந்து மேலும் சோபையுடன் விளங்கினர் பிறகு ஹிமவான் வினயத்துடன் ஈசனைத் திருமண மண்டபத்திற்கு இட்டுச் சென்றான்.

திருமண மண்டபத்தில் பூர்ண சந்திரன் போன்று பொலிவுற்ற முகத்துடன் பார்வதி தேவி அமர்ந்திருந்தாள். தேவியைக் கண்ட ஈசனின் முகத்தில் ஆம்பல் மலர் போன்ற கண்கள் சந்தோஷத்தில் மலர்ந்தன மனம் தண்ணீர்போல் தெளிவு பெற்றது. சிவபிரானின் வரவைக் கடைக்கண்களால்மெல்ல கவனித்த அன்னை வெட்கத்தால் அசைந்தாள். ஈசனின் சமீபத்தால் அன்னையின் முகம் நாணிச் சிவந்தது.

ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் B. சுந்தரராமன், M.A., B.Ed.,

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே இருப்பதில் ஈசனும் அம்மையும் மிகவும் ஆர்வம் கொண்டவர்களாக இருந்தபோதிலும் சுற்றிலும் நண்பர்களும் உற்றாரும் கூடி நின்றதால் எதிர்பாராத வகையில் பார்த்துக்கொள்வதுபோல அவர்கள் கண்கள் ஒன்றையொன்று சந்தித்து மீண்டன.

ஸப்த ரிஷிகள் மற்றும் குரு, சுக்ர பகவான் போன்ற புரோகிதர்கள் முன்னின்று நடத்திக் கொடுக்கசிவபிரான் விவாஹ ஹோமத்தைநடத்தினர். விவாஹ ஹோமப் புகையால் பார்வதி தேவியின் கண்களில் இட்டிருந்த மை கரைந்து வழிந்தது புகையின் உஷ்ணத்தால் தேவியின் காதுகளிலிருந்த யவதான்ய முளையும் வாடியது. கன்னங்கள் வியர்த்து சிவந்தன.

ஹிமவான் மந்த்ரோக்தமாகத் தன் மகள் பார்வதி தேவியின் கரத்தை, சிவபிரான் பற்றிடும் வகையில் ஈசனின் கரங்களில் ஒப்படைத்தான் மன்மதன் எரிந்து போனானென்றாலும், அவன் பார்வதியம்மையிடம் ஒளிந்திருந்ததால் ஈசனின் கர ஸ்பரிசம் பட்டதும் அம்மையிடம் ஏற்பட்ட ரோமாஞ்சம் எனும் மயிர் கூச்செறிதலால் மன்மதன் மீண்டும் உயிர்பெறுதல் சாத்தியமாகும் வாய்ப்பு நேர்ந்தது.

அன்னையின் கர ஸ்பரிசத்தால் சிவபிரானது கரங்களில் வியர்வை பெருகியது பொதுவாகவே சமான்ய மணமக்களிடையே கூட விவாக சமயத்தில் சிவ பார்வதி தேவியரின் அருள் ஸான்னிதயம் ஏற்படுவதாகவும், அதனால் அந்த தம்பதிகள் சோபையுடன விளங்குவதாகவும் சாஸ்த்ரங்கள் கூறு

அன்பர்களுக்கு எமது மனங்கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துக்கள்

"லோத்ரா" டானிக்
மகளிர்க்கு மட்டும்!

உடல ஆரோக்கியம் இயற்கை முறையில பெற மாதத்தில எலலா நாட்களும வேதனையற்ற நாட்களாக இருகக, தொடாநது "லோதரா" டானிக உட்கொள்ளுஙகள் வேதனையற்ற ஆரோக்கியம நிறைநத வாழ்வை பெறுங்கள.

75 வருடங்களுக்கு மேலாக பெண்களின் நம்பிக்கைககு பாததிரமான டானிக. "லோத்ரா" மருந்துகடைகளில் கிடைக்கும்

இலவச மருத்துவ ஆலோசனைக்கு கீழ்க்காணும் விலாசத்திற்கு இந்த கூபபனை பூர்தது செய்து உங்கள் கடிதத்துடன அனுப்புங்கள் ▶

பெயர்: __________
விலாசம்: __________
____
__________ PIN __________

கேஸரி குடீரம் (பி) லிமிடெட்
15 வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-600 014

கின்றன. சிவ பார்வதி தம்பதிகளே மணமக்களாக இருக்கும் இந்த நிலையில் அங்கு ஏற்பட்ட ஸான்னித்யர் சொல்லக் தரமன்று பிறகு பார்வதி தேவி அக்னியில்பொரியை இட்டு ஹோமம் செய்தாள் ஹோமாக்னியை சிவ பார்வதியர் மும்முறை வலம் வந்தனர். பொரியை இட்டதால் ஹோம குண்டத்தில் கிளம்பிய புகையை மஹரிஷிகள் சொற்படி பார்வதி தேவி முகர்ந்தாள்.

விவாகம் முடிந்ததும் பார்வதி தேவி தாய் தந்தையரை நமஸ்கரித்தாள் ஹிமவான் நல்லதிவுரைகளை கூறினான். சிவபிரான் பார்வதி தேவியை துருவ நட்சத்திரத்தைப் பார்க்கும்படி கூறினார். தேவியும் அவ்விதமே செய்தாள். ஸப்தரிஷிகளும் அருந்ததியும் அருகிலேயே இருந்ததால் அவர்களை தரிசித்தனர் ஹிமவானை படைத்தவர்என்ற முறையில் பிரமனைப் பார்வதிவணங்கினாள். சகல உலகங்கட்கும் அபய ஹஸ்தம் அளிக்கக்கூடிய புத்ர சந்தான பாக்யத்தை விரைவில் பெறும்படி பிரம்மதேவர் பன்முறை ஆசி கூறினார்.

பிறகு மத்திராக்ஷதைகளைத் தூவி இறைவன் இறைவியரை ஒருசேர கண்ட களிப்பில் தேவரும் மற்றையோரும் ஆரவாரித்தனர். லக்ஷ்மீ தேவி தம்பதிகளுக்கு குடைபிடித்தனர் சரஸவதி தேவி சிவபார்வதி தம்பதியர்களைப் புகழ்ந்து நாலு பாஷைகளிலும் கவி இயற்றி வீணாகானத்துடன் அதை இசைத்தாள்.

ரதி தேவியும் தேவர்களும்செய்த பிரார்த்தனைக்கு இணங்கி மன்மதனை உயிர்ப்பித்து அருளினார்சிவபிரான்.

ரதியும் மன்மதனும் சிவபிரானது பொற்பாத கமலங்களைப் பணிந்து பார்வதி தேவியையும் போற்றினார்கள்.

பிறகு விசுவ கர்மாவினால் நிர்மாணிக்கப்பட்ட மண்டபங்களில் அளவற்ற உபசாரத்துடன் படைக்கப்பட்ட அறுசுவை விருந்தினை அனைவரும் ஏற்றனர். மேலையும், ஹிமவானும் யாவரையும் கவனித்து உபசரித்தனர். மாலையில் நடைபெற்ற கலைநிகழ்ச்சிகளில் சிவபெருமானின் புகழை விளக்கும் சரித்திரங்கள். அப்ஸரஸ் மகளிரால் அழகாக நடித்துக் காட்டப்பட்டன.

சிவபிரான் பார்வதி தம்பதியர் சாத்திரங்களில் கூறியபடி மூன்று தினங்கள் நியமத்துடன் ப்ரும்மசர்யத்தை அனுஷ்டித்துத் தரையில் தர்ப்பாசயனத்தில் படுத்து உறங்கினர். தவத்திற்குரிய படுக்கையாக இருப்பினும் சிவனுக்கு அருகில் சயனிப்பதற்கு தேவி வெட்கமடைந்து தன் முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டாள்.

சிவபிரான் தனது கரங்களால் அன்னையின் முகத்தை நிமிர்த்தித் தன்னை நோக்கிய அன்னையைப் பார்த்துப் புன்னகைத்தார். பார்வதி தேவியை சிரிக்க வைப்பதில் விருப்பமுடையவரானசிவபிரான் ஹாஸ்ய ரஸத்துடன் விகடமாகப் பேசி நடித்து சிரிக்கவைப்பதில் வல்லவரான ப்ருங்கிடி என்ற சிவகணத்தைக் குறிப்புடன் நோக்க அவர்கள் பார்வதி தேவியை ஹாஸ்ய ரஸத்தில் மூழ்கும்படி செய்தனர்,'

திருமணத்திற்கு வந்திருந்த விருந்தினர் அனைவரும் விடைபெற்றுக் கிளம்பினர் ஹிமவான் பிரியா விடையளித்து அவரவர் தகுதிக்கேற்ப கௌரவித்து அனுப்பினான்.

சிவ பார்வதி தம்பதியர் இவ்விதம் தம் விரத காலத்தைப்பூர்த்தி

செய்தனர். புஷ்பங்களாலும், தோரணங்களாலும், கோலங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும், சகல விதமான வசதிகள் நிறைந்தது மான ஒரு விசாலமான அறையை தம்பதிகளுக்கான சயன கிருஹமாக ஹிமவான் உருவாக்கினான். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் ஆடம்பரமாகச் செய்தான். புரோகிதர்களால் முறைப்படி செய்ய வேண்டிய வைதிகச் சடங்குகள் செய்யப்பட்டன.

மிகவும் உன்னதமான ஒரு முகூர்த்தத்தில், உலகனைத்திற்கும் தந்தையான சிவபெருமானையும் ஜகத்திற்கே அன்னையாகிய பார்வதி தேவியையும் அந்த சாந்தி முகூர்த்த அறையினுள் அனைத்துப் பெரியோர்களும் அனுப்பி வைத்தனர்.

தோழியர்களின் வேடிக்கைப் பேச்சுக்களால் நாணமடைந்து முகம் சிவந்த பார்வதிதேவி பரமேச்வரனை நமஸ்கரித்தாள், ஈசனும் அம்பிகையை அன்புடன் ஆசீர்வதித்து ஏற்றார்.

தேவர்கள் தங்கள் நற்காலம் தொடங்கிவிட்டதென்றும், அரக்கர்களை அழிக்கும் குமாரசம்பவம் மிக விரைவிலேயே இருக்கிறதென்றும் எண்ணி அம்பாளையும் ஈசனையும் எண்ணித் துதித்தனர்.

(முற்றும்)

பக்தியின் ஸ்வரூபத்தையும் அது எவ்வகைப்பட்டதென்றும் விசாரிக்குங்கால் பகவானுடைய நாமங்களில் ஏதாவதொன்றை ஜபிப்பதே மற்ற எல்லாவற்றையும்விட மேலானதென்றும் அது எல்லோராலும் சுலபமாகச் செய்யக் கூடியதென்றும், அது ஒன்றே நாம் கடைத்தேறுவதற்குப் போதுமானதென்றும் நமது சாத்திரங்கள் புகழ்ந்து பேசுகின்றன.

—இராமகிருஷ்ணர்.

உங்களுக்கு தேவை

வியாபார அபிவிருத்திக்கு குபேர தன ஆகர்ஷணம், நகை வியாபாரிகட்கு ஸ்வர்ண கர்ஷண பைரவர், சித்தபிரமைக்கு உன்மத்த பைரவர், ஆபிசாரம் அகல ப்ரத்யங்கிராஸ்திரம், சத்ரு பாதைக்கு அகோராஸ்திரம், இழந்த பொருளோ பதவியோ திரும்பப்பெற கார்த்த வீர்யம், கல்வியில் மேன்மைக்கு மஹேன்மணி, விவாஹத் தடை நீங்க ஸ்வயம்வர பார்வதி, காத்யாயனி, மற்றும் பலவகை ஹோமங்கள், கேரள மாந்தரீக உபாஸன கிரமத்தில் செய்து ரக்ஷை அல்லது யந்த்ரம் பெற கீழ்க்கண்ட முகவரிக்கு 75 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

ஸ்கந்த மேருவும் விசேஷ ஆர்டரின் பேரில் செய்து தரப்படும்

பகவான் கிருஷ்ணர், ராமர் ஜாதகங்கள் இலவசமாய் பெற 45 பைசா தபால் தலை இணைத்து எழுதவும்.

முகவரி :— மந்த்ரசாஸ்த்ர ரஹஸ்யக்ஞ, ஜ்யோதிஷ கல்பதரு

ஸ்ரீ குருவாயூரப்பதாஸன் - B. சுந்தரராமன், M.A.,B.Ed.,

பழமார்னேரி P.O., வழி - திருக்காட்டுப்பள்ளி-613104.

தஞ்சை மாவட்டம்

யோகம்	சிரா. திதி	ஆங் கிலம்	தமிழ்	வாரம்	1984 ஆகஸ்ட் (ரக்தாக்ஷி வருட ஆடி—ஆவணி)
அ. ம	பஞ்ச	1	17	புதன்	சதுர்த்தி 0-56 பஞ்சமி 59-6 உத்ரம் 36-0 சிவம் 42-7 அகஸ் 31-8 நாகபஞ்சமி
சி	சஷ்டி	2	18	வியா	சஷ்டி 52-55 ஹஸ்தம் 31-38 ஸித்தம் 34-39 அகஸ் 31-7 சஷ்டி உபவாசம்
சி	ஸப்த	3	19	வெள்ளி	ஸப்தமி 47-28 சித்திரை 28-15 ஸாத்யம் 27-20 அகஸ் 31.6 ஸப்தமி விருதம்
அ சி.	அஷ்ட	4	20	சனி	அஷ்டமி 42-34 ஸ்வாதி 25-5 சுபம் 20-32 அகஸ் 31-5 காளாஷ்டமி
ம.	நவமி	5	21	ஞாயிறு	நவமி 38-22 விசாகம் 22-36 சுப்ரம் 14-17 அகஸ் 31 4
சி	தசமி	6	22	திங்கள்	தசமி 35-1 அனுஷம் 20-25 பிராம்யம் 8-39 அகஸ் 31.3
சி.அ.	ஏகா	7	23	செவ்	ஏகாதசி 32-55 கேட்டை 20-15 மாகே 3-47 வைதி 50 அகஸ் 31.2 ஸர்வ ஏகாதசி. பரிவர்த்தன ஏகா.
ம. அ.	துவா	8	24	புதன்	துவாதசி 31-44 மூலம் 20-47 விஷ்க 56-54 அகஸ் 31-1
சி	திர	9	25	வியா	திரயோதசி 31-54 பூராடம் 22-30 ப்ரீதி 54-58 அகஸ் 31-0 பிரதோஷம்
சி. ம.	சதுர்	10	26	வெள்ளி	சதுர்தசி 33-42 உத்ராட 25-27 ஆயுஷ் 54-58 அகஸ் 30-59 வரலக்ஷ்மீ விருதம்
சி	பௌர்	11	27	சனி	○ பௌர்ணமி 36-5 சிரவ 29-38 ஸௌபா 54-6 அகஸ் 30-58 பௌர்ணமி விருதம் ருக்யஜுர் உபா கர்மா
ம. சி	பிர	12	28	ஞாயிறு	சிராவண கிருஷ்ண பிரத 39-48 அவிட் 34-48 ஸோப 54-48 அகஸ் 30-57 காயத்ரி ஜபம்
சி. ம	துதி	13	29	திங்கள்	துதியை 44-17 சதயம் 40-14 அதிகண் 56-54 அகஸ் 30-56
ம. அ	திருதி	14	30	செவ்	திருதி [illegible]-10 பூரட்டா 47-14 சுகர்மம் 57-35 அகஸ் 30-55
சி. ம.	சதுர்	15	31	புதன்	சதுர் 53-37 உத்ரட் 58-0 திருதி 58-39 அகஸ் 30-54 சங்கஷ்ட ஹர சதுர்த்தி
சி.அ.	பஞ்ச	16	32	வியா	பஞ்சமி 5[illegible]-51 ரேவதி 56-55 சூலம் 58-46 அகஸ் 30-52

அ	சஷ்டி	17	1	வெள்ளி	சஷ்டி 60-0 அசுவதி 60-0 கண் 60-0 அகஸ் 30-50
சி	ஸப்	18	2	சனி	சஷ்டி 2-6 அசுவதி 4-29 கண் 0-34 அகஸ் 30-49 சீதளா ஸப்தமி விருதம்.
சி	அஷ்	19	3	ஞாயிறு	ஸப்தமி 5-6 பரணி 9-1 விர்த்தி 0-32 துருவ 53-12 அகஸ் 30-48 காளாஷ்டமி ஸ்ரீஜெயந்தி நசாபல விருதம்
ம. அ	நவமி	20	4	திங்கள்	அஷ்டமி 6-53 ✻ கார்த்தி 17-20 வியாகா 57-36 அகஸ் 30-47 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
அ. சி	நவமி	21	5	செவ்	நவமி 7-22 ரோகணி 14-24 ஹர்ஷ 54-39 அகஸ் 30-45
சி	ஏகா	22	6	புதன்	தசமி 6-41 மிருக 15-18 வக்ரம் 40-32 அகஸ் 30-44 ஸர்வ ஏகாதசி
ம. அ	துவா	23	7	வியா	ஏகா 4-45 திருவா 14-58 ஸித்தி 4?-47 அகஸ் ?0-43
சி. ம	திர	24	8	வெள்ளி	துவா 1-42 திரயோ 56-1 புனர் 9-14 வியதீபா 40-7 அகஸ் 30-41 பிரதோஷம்
சி. ம	சதுர்	25	9	சனி	சதுர்தசி 52-57 பூசம் 11-18 வரியா 33.48 அகஸ் 30-40
சி. ம	அமா	26	10	ஞாயிறு	● அமா 47-32 ஆயில்யம் 8-20 பரிகம் 26-57 அகஸ் 30-38 ஸர்வ அமாவாஸை.
ம. சி	பிரத	27	11	திங்கள்	பாத்ரபத சுக்த பிரதமை 41-41 மகம் 5-45 சிவம் 18-21 அகஸ் 30-37
சி அ சி	துதீ	28	12	செவ்	துதீயை 35-38 பூரட் 0-45 உத்ரம் 50-20 ஸித்தம் 12-9 அகஸ் 30-36
ம. சி	திருதி	29	13	புதன்	திருதீயை ?9-34 ஹஸ்தம் 52-34 ஸாக்ய 4-28 சுபம் 47-12 அகஸ் 30-34
சி. அ	சதுர்	30	14	வியாழ	சதுர் 23-37 சித்தி 48-47 சுப்ரம் 49-38 அகஸ் 30-33 சதுர்த்தி விருதம் விநாயக சதுர்த்தி ஸித்தி கணபதி விருதம்
சி	பஞ்	31	15	வெள்ளி	பஞ்சமி 18-7 ஸ்வாதி 45-23 பிராம்ய 42-35 அகஸ் 30-31 ரிஷி பஞ்சமி

இம்மாத ஜெயந்தி தினங்கள் : ஆகஸ்ட் 19 ஸ்ரீ ஜெயந்தி, 28 கல்கி ஜெயந்தி

இம்மாத முகூர்த்த தினங்கள் : ஆகஸ்ட் 17 (ஆவணி 1 வெள்ளிக்கிழமை அஸ்வதி நட்சத்திரம் 9-00 to 10-15 கன்னியா லக்னம். ✻ 24 (ஆவணி 8) வெள்ளிக்கிழமை புனர்பூசம் நட்சத்திரம் 7-30 a.m. to 9-15 கன்னியா லக்னம் ✻ 30 (21) வியாழன் சித்திரை நட்சத்திரம் 7-30 a.m. to 9-15 கன்னியா லக்னம். ✻ 1 (15) வெள்ளி ஸ்வாதி நட்சத்திரம் 7-30 a.m. to 9-15 கன்னியா லக்னம்.

பெண்களுக்கு மட்டும்

நக்ஷத்திர குணங்கள்

A. ராகவய்ய ஜோஸ்யர் - திருவள்ளூர்

மூல நக்ஷத்திரம்

இருபத்தேழு நக்ஷத்திரங்களில் பத்தொன்பதாமிடம் பெற்றது மூலம் நக்ஷத்திரமாகும். இது அசுர குலத்திற்குரிய நக்ஷத்திரமாகும்.

இந்த நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்ணை மணந்தால் அவளின் மாமனுர் மரிப்பார் என்பது இன்று நம் மக்களிடையே நிலவி வரும் கருத்தாகும் அதற்கேற்ருற்போல் சாஸ்திர நூல்களில் மூல நட்சத்திரம் நாலாம் பாதம் மட்டும் மாமனுர் தோஷம், மிகுதி பாதங்கள் கிடையாது.

மேலும் ஆண் மூலம் அரசாளும்; பெண் மூலம் நிர்மூலம் என்றும்கூறுகிறுர்கள். இவைகளை வைத்துக் கொண்டு மூல நட்சத்திர பெண்கள் மீது பழிகள் உண்டாக்குகிறுர்கள். இதனுல் மாமனுருக்கு ஒரு ஆபத்தும் கிடையாது. இவர்களின் கணவனின் ஜாதகத்தால் கர்மதசையால் மாரகம் ஏற்பட்டால் அதற்கு இவர்களா பொறுப்பு? ஆதலால் மூல நட்சத்திர பெண்களால் எந்த விதபீதியும் இல்லை மேலும் மூல நட்சத்திரத்தில பெண்கள் ருது வாளுல் பந்து போஷணை உடையவர்கள், செல்வம் உடையவர்கள். எனவே தைரியமாக இவர்களை மணக்கலாம்.

இந்த நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களுக்கு நக்ஷராதிபதி கேது, தெய்வம் விநாயகர், ராக்ஷஸகணம், யோனி நாய், தாமஸ குணம். ஆகாய தத்வம். இந்நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களே கணவனின் வாழ்க்கைக்கு மூலாதாரமானவர்கள். அசுரகுணங்கள் அதிகம். அயல்நாட்டு பாஷைகளில் அதிக ஆர்வமுள்ளவர்கள் யானைக் கலர் ஆடைகள், வைடூர்ய கல் ஆபரணங்கள்மீது அதிக ஆவல் உடையவர்கள்.

உயரமாக இருப்பார்கள். இவர்களின் வார்த்தைகள் மற்றவர்க்கு வேதனையைஉண்டாக்கும் உணர்ச்சிகள் அதிகம். இவர்கள் போடும் திட்டம் யாவும் முழுமையான வெற்றியைத் தரும். பெரிய சபைகளின் சமஸ்தான ராணிகள் என்றும் கூறலாம் அதிகாரம் செய்வதில் வல்லவர்கள் கணவன்மார்கள் இவர்களைக் கண்டாலே நடுநடுங்கி விடுவார்கள். முகராசிஉள்ளவர்கள். வடமேற்கு திசை பிரயாணங்களை மேற்கொள்வார்கள்.

சிலர் எந்த நேரம் வெட்டிப் பேச்சுகளைப் பேசிக்கொண்டுகாலத்தைக் கழிப்பார்கள். அடுத்தவர் வீட்டு விஷயங்களைப் பற்றிப் பேசுவது அவல் பாயாசம் சாப்பிட்டது போல்தான் கெட்டிக்காரப் பெண்கள். இவர்களைக் கண்டாலே ராணுவ வீரனைக் கண்டு திகைப்படைவதுபோலதான். கலகலப்புடன் காரியத்தை முடிப்பார்கள்.

இன்னும் சிலர் பார்ப்பதற்கு அமைதியாகத் தோற்றமளிப்பர். பயந்த சுபாவம் உள்ளவர்கள். எந்நேரமும் ஊர் சுற்றும் எண்ண

முடையவர்கள். தெய்வபக்தி அதிக முள்ளவர்கள். தெய்வத் திருப்பணி கள், தெய்வ கதைகள்மீது அதிக ஆசை யுள்ளவர்கள். எதையும் சிந் திக்குமளவிற்கு புத்திசாலித்தனம் இவர்களிடமிராது கணவனைக்கண் டால் பயந்து நடுங்குவார்கள்.

முதல் பாதம்

நல்லவர்கள்போல் நடிப்பார்கள். சில சமயங்களில் அற்பமான விஷ யங்களுக்குத் தலைமை தாங்கி பெயரை ரிப்பேர் செய்துக்கொள் வார்கள், மற்றவர்களிடம் உத விக்குச் செல்வார்கள். உதவி கிடைத்ததும் என் சாமர்த்தியத் தால்தான் காரியம் முடிந்ததென பிரலாபித்துக் கொள்ளுவார்கள். சோம்பேறித்தனமாக இல்லாமல் சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

இரண்டாம் பாதம்

அயல்நாட்டு பாஷைகள், ஆராய்ச்சிக் கலைகள் போன்றதில் நாட்டம் உள்ளவர். சமயத்திற்கேற் றாற்போல் பேச்சுகளை செய்கை செய்பவர்கள். கணவன்மார்கள் தாஸனாக இருப்பார்கள். இருதயத் துடிப்புகள் உள்ளவர்கள்.

மூன்றாம் பாதம்

ஆடை அலங்காரங்களில் விருப்ப முள்ளவர்கள். அபிநய.சிங்காரிகள். ஏவல், சூன்யம் போன்ற துஷ்ட வேலைகளை மேற்கொள்வர் எப் போதும் வீடு வீடாகச் சுற்றி அலை வர். செக்கு மாட்டுக்குள்ள அமைதி இவர்களிடம் பணி செய் பவர்களுக்குண்டு.

நான்காம் பாதம்

திரேக பலம், பொன்னிறமுள்ள வர்கள். சாஸ்திரங்கள் மீது அதிக பிடிப்புள்ளவர்கள். கல்விச்சாலை கள் அமைக்க விருப்பமுள்ளவர்கள். தந்திரசாலிகள். இவர்களுக்கு அறு சுவைகளில் புளிப்புப் பண்டங்கள் மீது ஆசை அதிகம்.

இந்த நக்ஷத்திரத்தில் பிறந்த பெண்களுக்கு பிரதி திங்கள், புதன், வெள்ளி ஆகிய கிழமைகள் 5, 14, 23 தேதிகள், 14, 23, 32, 41, 50 ஆகிய வயதுகள், சூரிய, சந்திர, செவ்வாய், ராகு, குரு தசைகளும் வாழ்க்கையில் விசேஷ யோகங்களை நல்கும். புதன், சுக்ரன், சனி, கேது தசைகளில் குடும்பத்தில் அமைதிக் குறைவுகள், பணப் பற்றுக்குறை போன்றவைகள் உண்டாகும். இதற்குத் தக்கப் பரிகாரம் துர்கா ஸப்தசதி பாராயணம், வனதுர்கா ஹோமங்கள், மங்களவார விரதங் களால் நன்மைகள் உண்டாகும்.

தனியாக ஒவ்வொரு நாளும் ஜபம் செய்வதல்லாமல் வாரத்துக்கு ஒரு முறை விடுமுறை நாளில் ஆஸ்திகர்கள் மற்றவர்களையும் சேர்த்துக் கொண்டு சங்கோசமில்லாமல் எல்லோரும் ஒருமிக்க பகவன் நாமாவை உரக்கச் சொல்லிக் கொண்டு வீதிகளில் சென்று, சமீபத்திலுள்ள கோயிலின் முன்பு சற்று நேரம் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டும்.

—இராமகிருஷ்ணர்

பக்த மீரா அருளிய

கிரிதர கோபாலா

(ஸ்ரீனிவாஸ ஜகந்நாராயணன்)

பாடல் : 64

ஏ ராணு! நான் நாராயண பிரேமையில் மூழ்கிவிட்டேன். நான் தாளங்களைத் தட்டிக் கொண்டு, மிருதங்க தாளத்துடன் சாதுக்கூட்டத்துடன் சேர்ந்து, அவர்களுடன் கூடி நாட்டியமாடுகிறேன் எல்லோரும் எனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதாக ஏசுகிருர்கள். அவர்களுக்கு என்னுடைய அந்த ரங்கக் காதலைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

அவர்களால் உன் மதத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை என் பிரபு கண்ணனிடம் மோகமில்லை. ஆனல், என் பதி ராணு என் நடத்தையைக் கண்டு நஞ்சை அனுப்பி வைத்தார் நான் அதைப் பொருட்படுத்தாமல் குடித்து விட்டேன் மீரா சொல்கிருள்: என் சுவாமி கிரிதர நாதர், எத்தனையோ பிறவிகளாக நான் அவரைக் காதலிக்கிறேன். என் காதல் அவரிடம் அளவு கடந்தது.

பாடல் : 65

ராணு எனக்கு நஞ்சினை அளித்தார். அதை நான் குடித்துவிட்டேன். என் உயிரைப் போக்குவதற்கு ராணு திட்டமிட்டு விட்டார். நஞ்சைக் குடித்த பின்பு, என் கிருஷ்ண பக்தியும் காதலும் கொழுந்துவிட்ட தீப்போல் சுடர் விட்டு எரியத் தொடங்கிவிட்டது. என்னுடைய தவச் சக்கரமும் பல மடைத்து விட்டது புடமிட்ட தங்கம்போல் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. ஆகவே, குல மரியாதைகளையும், உலக மரியாதைகளையும் தாண்டிவிட்டேன்.

வெள்ளம் கரையுடைத்து எங்கும் பரவுவதுபோல நான் எங்குஞ் செல்லத் துவங்கிவிட்டேன். என் கட்டுப்பாடுகள் நாசமடைந்து விட்டன: நானே ஆற்றலற்ற அபலை, எனக்கு பைத்தியம்பிடித்து விட்டது அதனல் எது கெட்டது, எது நல்லது என்கிற வேறுபாடுகள் தெரியவில்லை என் இதயத்தைக் காதல் என்கிற அம்பராத் தூணியிலிருந்து வரும் அம்பு பிளந்துவிட்டது, ஆழமாகப் புண்பட்டுவிட்டது. என் உடல், செல்வங்கள், கற்பு எல்லாம் கிரிதர கோபாலனிடம் அளித்துவிட்டேன். என் வாழ் நாட்களைச் சாதுக்களிடம் அளித்துவிட்டேன். என்னுடைய உடைமைகளனைத்தையும் கிரிதர

கோபால் ஏற்றுக் கொண்டுவிட்டார். ஏ, பிரபு, மீரா உன்னுடைய அடிமை என்று அறிந்துகொண்டு என்னைக் காப்பீர்.

பாடல் : 66

தோழீ, நான் எப்பொழுதும் கோவிந்தனுடையகலியாணகுணங்களையே பாடிப்பாடி இன்பமடைகிறேன். என்னை இந்தச் செயலிலிருந்து விட்டு விலக ராணா நினைப்பாராகில், நான் அவருடைய தேசத்தைவிட்டு ஓடிப்போய் விடுகிறேன்.

ராணா நஞ்சு கொடுத்து என்னைக் கொல்வதற்கு நினைத்தார். நானோ அந்த நஞ்சைக் கண்ணனுடைய புகலமுதமாக நினைத்து அதைக் குடித்துவிட்டேன் ராணா என்னுடைய இடுப்பை அலங்கரிப்பதற்குக் கருநாகத்தை அனுப்பி வைத்தார். அதை நான் சாளிக்ராம சிலையாகக் கண்டேன். மீரா சொல்கிருள் : இப்பொழுது நான் கண்ணன் காதலால் பயித்தியம் கொண்டுவிட்டேன். என் பதியாக மேகவண்ண கண்ணனை அடைந்து விட்டேன்.

பாடல் : 67

தோழீ! கண்ணனிடம் பக்திக் காதல் என்னிடம் நன்றாக அடைந்துவிட்டது. என் உடம்பு முழுவதும் அந்தக் காதலின் நிறம், கறை படிந்துவிட்டது. அதிகமாக சாயம் (நிறம்) ஏறிவிட்டது கோடி உபாயங்கள் செய்தபோதிலும் இந்தக் கறை போகாது. ராணா என்னைக் கருநாகத்தைத் தழுவும்படிச் சொன்னார் நான் அதை என் கழுத்தில் மாலையாக அணிந்து கொண்டேன். நீலமணி மாலையைப் போன்று மிக்க மகிழ்ச்சியான மனத்துடன் அதை ஏற்றுக்கொண்டேன்.

இதற்குப் பிறகு ராணா நஞ்சை அனுப்பிவைத்தார். நான் கோவிந்தனுடைய கல்யாண குணங்களைப் பாடி, அவருடைய புகலமுதமாக நினைத்து அந்த நஞ்சினை, கண்ணபிரானுடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டு அதைக் குடித்தேன். இதைவிட வேறு செய்தி எனக்கு என்ன வேண்டும்? என் பிரபு கிரிநாதர், அவரிடம் என் காதல் பழுத்துவிட்டது அவருடைய காதலின் நிறம் ஆழமாக என்னிடம் பதிந்துவிட்டது. சாயம் போகக் கூடிய நிறமாக இருந்தால், அது போய்விடும். ஆனால் இந்த நிறமோ முழுவதும நன்றாகப்படிந்து கரையேறிவிட்டது. ஆகவே கண்ணபிரானின் காதல் என் மனத்தை விட்டு அகலாது.

தொகுப்பு: ஏ.எஸ்.எம். சென்னை

உலகப் புகழ் பெற்ற ஸ்ரீகணேஷ்ராம்ஸ் 777 பிராண்ட் உணவுப் பொருள்கள் உங்கள் அருகாமையில் உள்ள கடைகளில் இப்பொழுது கிடைக்கிறது.

- திடீர் புளியோதரை பேஸ்ட்
- திடீர் வத்தல் குழம்பு பேஸ்ட்
- திடீர் மிளகு ரசம் & தக்காளி ரசம் பேஸ்ட்
- டாம்-எகஸ் (TAM-EX) &
- கார்லிகஸ் (GARLIX)
- கரகரப்பான, முறமுறப்பான அப்பளம் மற்றும் ஊறுகாய்

SRI GANESHRAMS ANALYTICAL LABORATORIES MADRAS-1 777 (REGD)

ஸ்ரீ கணேஷ்ராம் & கோ.,

சென்னை - 600 001. போன் : 20401 & 20402

ஸ்ரீ மதுராஷ்டகம்

பகவான் கோபாலனின் செயகை, ஸ்வருபம், அவனது லீலைகள் பக்தர் களுக்கு மதுரமாக இருக்கும். அவன் நாமாவை மனனம செயவதும் மிகவும் மதுரமானது. பிரம்மஸ்ரீ முடிகொண்டான் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் அவர்களால் அருளபபட்டுளள மதுரமான இந்த மதுராஷ்டகத்தைப் படிப்பவர் களுககு சகலவிதமான கஷ்டங்கள் நீங்கி பரம செளககியத்தைத் தாது நற்கதி பெறவும் உதவியாயிருககும். படிப்பதற்கே மதுரமாயிருககும். —ஆசிரியர்.

அதரம் மதுரம் வதனம் மதுரம் நயனம் மதுரம் ஸஹிதம் மதுரம்
ஹ்ருதயம் மதுரம் கமனம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

வசனம் மதுரம் சரிதம் மதுரம் வஸனம் மதுரம் வலிதம் மதுரம்
சலிதம் மதுரம் பரமிதம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

வேணுர் மதுரோ ரேணுர் மதுர: பாணிர் மதுர: பாதெள மதுரெள
ந்ருத்யம் மதுரம் ஸக்யம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

கீதம் மதுரம் பீதம் மதுரம் புக்தம் மதுரம் ஸுப்தம் மதுரம்
ரூபம் மதுரம் திலகம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

— முடிகொண்டான் எஸ். கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் —

கரணம் மதுரம் தரணம் மதுரம் ஹரணம் மதுரம் ஸ்மரணம் மதுரம்
வமிதம் மதுரம் சமிதம் மதுரம மதுராதி பதே ரகிலம் மதுரம்

குஞ்ஜா மதுரா மாலா மதுரா யமுனா மதுரா வீசீ மதுரா
ஸலிலம் மதுரம் கமலம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

கோபீ மதுரா லீலா மதுரா யுக்தம் மதுரம் புக்தம் மதுரம்
த்ருஷ்டம் மதுரம் ஸிஷ்டம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

கோபா மதுரா காவோ மதுரா யஷ்டிர் மதுரா ஸ்ருஷ்டிர் மதுரா
தலிதம் மதுரம் பலிதம் மதுரம் மதுராதி பதே ரகிலம் மதுரம்

— சுபம் —

நடராஜா அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடுபவர், ஆசிரியர்: கே. ராதாகிருஷ்ணன்,
அலுவலகம்: நெ. 78, டாக்டர் பெஸன்ட்ரோடு, சென்னை-14, தமிழ்நாடு. போன்: 846434

Phone : 21219
31349

AGARWAL BHAVAN

FOR

QUALITY SWEETS & SAVOURIES

- MILK SWEETS
- BENGALI SWEETS
- GHEE SWEETS

&

HIGHLY TASTED SAVOURIES

*

128, Govindappa Naickan Street,

MADRAS - 600001.